கம்பன் கவியரங்கில் மலரமுதன்

பூ. அமிர்தலிங்கன்

உ

காரைக்குடி இந்துமதாபிமான
சங்கத்திற்கு அன்பளிப்பு

கம்பன் கவியரங்கில்
மலரமுதன்

★

கவிஞர்கோ

பூ. அமிர்தலிங்கனார், எம். ஏ.,

'அறிவகம்' – காரைக்குடி-1

பாண்டியன் பதிப்பகம்

40, இரண்டாம் தெரு

திருவள்ளுவர் திருநகர்

காரைக்குடி-623 001

முதற்பதிப்பு - சனவரி, 1964

இரண்டாம் பதிப்பு: 12 - 11 - 81

ஆசிரியரின் பிறநூல்கள்:

வள்ளுவர் கண்ட உயிரினங்கள்;

கருத்தும் கற்பனையும்

விலை ரூ.: 3 - 00

தமிழ்க்கடல் - சிவமணி

ராய. சொ. அவர்களருளிய

பாயிரம்

1

தமிழ்க்கடலைக் குடித்துயர்ந்த முதுகுளத்தூர்த்
தனிப்புலவன்; சாமி நாதத்
தமிழ்க்கடவுள் சரவணத்தில் சார்பெருமாள்
தன்பெயரைத் தாங்கும் தக்கோன்;
இமிழ்திரைசூழ் இவ்வுலகில் சீட்டுப்பா
இயற்றுவதில் இணையே இல்லான்;
அமிழ்தசர வணப்பெருமாள், அரும்பேரன்
அமிர்தலிங்கன் அருமை அன்பன்:

2

கொள்ளுபொருள் ஒருகோடி கொடுத்துப்பல்
கலைக்கோயில் குயிற்றும் எங்கள்
வள்ளல்உயர் அழகப்பன் வைத்தகலைக்
கல்லூரி வந்து வாய்த்த
தெள்ளுதமிழ் விரிவுரையான்; சிறந்ததமிழ்ப்
பொழிவாளன்; தீராக் காதல்
உள்ளம்நிறை அன்புடையான் என்னிடத்தே;
உயர்கவிஞன்; ஊக்கம் மிக்கான்:

3

காமாந்த கன்போற்றும் காரைநகர்க்
கம்பன்விழாக் கவிய ரங்கில்
தேம்ஆர்ந்த கனியுடனே தித்திக்கும்
பால்கூட்டிச் செய்து செய்து
மாமாங்கம் ஒன்றாகத் தொடர்ந்தளித்த
மன்னுகவி மழையைத் தேக்கி
நாம்மாந்தப் படைக்கின்றான்; நனிபருகி
இன்புறுவேம்; நண்பீர்! வம்மின்!!

காரைக்குடி
7—1—64

ராய. சொக்கலிங்கன்

வள்ளல் அழகப்பர் நினைவுறை

பாடாத முல்லைக்குத் தேரை ஈந்த
　　பாரிவேள் பிறந்ததமிழ்ப் பறம்பு நாட்டில்
வாடாத வண்மைக்குச் சான்று காட்ட
　　வாழையடி வாழையென வந்த வள்ளல்
கோடானு கோடிதொகை கொடுத்துக் கல்விக்
　　கோவில்கள் பலஎடுத்துக் கற்றோர் நெஞ்சம்
ஏடாகத் தன்புகழை எழுதும் வீரன்
　　எமக்கினிய அழகப்பன் ஏற்றம் வாழ்க!

உள்ளுறை

காரைக்குடிக் கம்பன் திருநாள் கவியரங்கம்.

முகமலர்

பொலபொலெனக் கவிமாரி பொழிசரவ
 ணப்பெருமாள் புகழிற் பூத்தான்,
அலைகடல்போல் புகழ்மோதும் அழகப்பர்
 கல்லூரி அமிர்த லிங்கன்,
கலைவளமார் தமிழ்க்கம்பன் திருநாளில்
 கவியரங்கம் களிப்ப ஏறி
உலைவறியாப் பாமலர்கள் உதிர்க்கின்ருன்:
 நாமவற்றை உ.வந்து கொள்வாம்.

காரைக்குடி 5-1-64

சா. கணேசன் (எம். எல். ஏ.)
செயலர்-கம்பன்கழகம்.

1952

இயற்கைப் பத்து

காடு

தமிழ்த்தாய் வணக்கம்

சொல்லரிய பொருளாழச் சுவையாய் நின்று
சோதியென வழிகாட்டும் தமிழ ணங்காம்
வெல்லரிய முப்பாலைச் சங்கத் திட்டு
மெய்வளர ஊட்டுந்தாய் வணக்கம் செய்வாம். 1

தோற்றுவாய்

முல்லைநிலங் காட்டும்தொல் காப்பி யன்சொல்
முதல்தெய்வ மாயோனும் இராம னாகித்
தொல்லைநிகழ் நாடுவிட்டுத் துறவு தாங்கும்
தொடர்காட்டுக் கவிபாடுங் கம்பன் போற்றி. 2

தலைவர்:- திருப்பெருந்திரு, குன்றக்குடி அடிகளார்.

நான் கண்ட காடு

செடிகண்டேன், மரங்கள் கண்டேன்,
செறிவுடைப் புதர்கள் ஊடே,
கொடிகண்டேன் சிரிக்கும் முல்லைக்
கொழுமணப் பூக்கள் கண்டேன்,
படிகண்ட கான்யாற் ருங்கண்
பழக்குலை கண்டேன்; மாந்தர்
அடிகண்ட சுவடு காணேன்,
அழகிலாப் பொருளுங் காணேன். 3

புனஎலு மிச்சை காயா
பூவிரி கொன்றை யாச்சா
தினைபயிர் வரகு சாமை
தீங்கனி பலவு தேமா
நினைவழி தேனின் இருட்டு
நெல்லி யோடிருக்கக் கண்டும்,
அனையன பறித்துத் துய்க்க
அருந்துணை யாரும் காணேன். 4

மான் கண்டேன், முயலுங் கண்டேன்
மறப்புலிக் களிறுங் கண்டேன்
தேன்வண்டு தும்பி பின்னர்
திரிகின்ற காதல் கண்டேன்,
வான்கண்ட மயிலின் கூத்தும்
வளரிசைக் குயிலின் பாட்டும்
நான்கண்ட வாறு சொல்ல
நாள்பல வாகு மம்மா! 5

பனங்காட்டுச் சுவடியும் விசிறியும்

கண்ணுெத்த ஞானத்தைப் பதிவு செய்த
கலைக்கோயிற் பெரும்புலவர் மனத்தெழுந்த
எண்ணத்தை எழுத்தாலே நிலைப்படுத்தும்
ஏடுளங்கள் பனங்காட்டில் எழுந்த தன்றே !
வண்ணத்தீந் தமிழ்க்கவிஞர் தேனைச் சேர்த்து
வடித்திட்ட பழச்சாற்றி லின்பங் கொள்ளும்
எண்ணத்தா லிருக்கின்றீர்; விசிறி தானும்
இளங்காற்றை எழுப்பாக்கால் இன்ப முண்டோ! 6

பாரியும் கம்பனும்

போர்க்களத்துப் புறங்காட்டா ஆணின் கற்பும்
புறத்தாற்றின் வழியறியாப் பெண்ணின் கற்பும்
சேர்த்தமைத்த அடையாளம் முல்லைப் பூவாச்
சிறப்பித்த பழம்புலவர் நெஞ்சங் கண்டோ
தேர்க்குதிரைப் பூட்டோடு முல்லைக் கீந்து
சீர்பெற்றான் பாரி;-வளம் தெரிந்த கம்பன்
பார்க்குள்ளே முல்லைப்பூச் சீதைக் கற்பு
படரத்தான் காவியத்தைப் படைத்தான் மாதோ. 7

குழல்-யாழ்-முழவின் பிறப்பிடம் காடு

ஆண்வண்டு மனையின்ப வாழ்வு தேடி
அளாவியெழு மூங்கிலினைத் துளைக்க; ஆங்கே
நாணின்றிப் பெருங்காற்று நுழைந்து செல்ல,
நாதந்தான் இசையருவி வெள்ள மாகிப்
பாண்மைந்தன் செவிப்பட்டு வரம்பும் பெற்றுப்
பார்போற்றுங் குழலாகப் பிறந்த தம்மா !
சேண்வந்த யாழ்முழவுப் பிறப்பும் ஈண்டு
செங்காட்டின் பொருள்காட்டும் சின்ன மன்றே! 8

மானும் புலியும் காட்டும் மானத்தின் சிறப்பு

கடும்புலியைக் கண்டதொரு கவரி மான்றான்
கலங்கியறி வழிந்தோடக் காட்டி னுள்ளே
அடும்புதரில் வால்சிக்கி அவமா னத்தால்
அசையாது நின்றதூஉம்; அடித்த வேகம்
தடுக்கரிதா யிடப்புறத்தி லம்மான் வீழத்
தாவாத மானத்தைத் தலையா யெண்ணிக்
கொடும்புலியும் உண்ணாது குன்றி யதூஉம்;
குணங்காட்டும் தமிழ்க்காட்டின் கொள்கை யன்றோ!

பக்திமானும் புள்ளிமானும்

ஏமாற ஏமாற நாமம் போட்டே
எள்ளளவும் அரிதாளைப் பற்றா மாந்தர்
போமாறு புல்முளையாப் பொட்டல் ஆகிப்
போனாலும் பக்திமான் புகழ்ச்சி கொள்வார்;
வாமான்கள் இனமாகும் புள்ளி மான்கள்
வாய்கொண்ட அரிதாளைப் பற்றி னாலும்
கோமான்கள் எனக்காட்டில் திரித லன்றிக்
கூட்டத்தில் நடமாடக் கண்ட துண்டோ! 10

மான்களின் இல்லற வாழ்க்கை

வெள்ளை நிறத் துணிவிரித்துப் போர்த்தாற் போலும்
வெயிலடிக்க, மரங்களெலாந் தீய்ந்து நிற்கப்
பள்ளநிறை நீர்க்குட்டம் ஓம குண்டப்
படுகுழியாய் அனல்கக்க, நீரின் வேட்கை
தள்ளுறவே தவித்திட்ட கலைமான் ஒன்று
தாழியைப்போல் விளங்குசுனை தாவிக் கண்டு
மெள்ளதுணைப் பெண்மானை நடத்திச் சென்று
மேவுசுனை நீர்குடிக்கத் தூண்டுங் காலை, 11

ஆணழகன் கலைமான்தான் பருக வென்றே
அப்பிணையும் வாய்வைக்கா தப்பால் நிற்க,
காணமனம் பொறுக்காத ஆணும் சென்றே
கள்ளத்தில் உறிஞ்சுதல்போல் நடிப்புச் செய்யப்
பேணுகின்ற பெண்மானுங் கள்ள மின்றிப்
பெருமகிழ்வா லினிதந்த நீரை யுண்ணும்:
காணுகின்ற இல்லறத்துக் கலைமான் வாழ்க்கை,
கானகத்துச் செய்தியின்று நாட்டில் உண்டோ! 12

சிலப்பதிகாரம் காட்டகத்து விளைவு

மலைக்கல்லை வடவரசர் முடியி லேற்றி
மாற்ருர்க்குத் தண்டமிழின் வீரம் காட்டிக்
கலைக்கரசிக் காலடிக்குச் சிலம்பு சூட்டிக்
கண்கண்ட கற்பினுக்குக் கோயில் கண்ட
விலைமதிக்க வொண்ணுத விந்தைச் செய்தி
வேட்டுவரின் காட்டகத்து விளைவே யன்ருே!
அலைகொழிக்கும் பேராற்றங் கரையின் பாங்கர்
அன்றமர்ந்த சேரர்குல ஆற்றல் வாழ்க! 13

கண்ணப்பர் அன்புச்செய்தி

பொன்முகலி யாற்றுநீர் வாயிற் கொண்டு
பூவெடுத்துத் தன்றலைக்கு முதற்கண் சூடிக்
கொன்றழித்த விலங்கினத்தின் தசையைச் சுட்டுக்
குதப்பியதன் சுவையாய்ந்து கையிற் கொண்டு
பொன்குடுமித் தேவருக்குப் பூசை போட்டுப்
பூதலத்தார் கொண்டாடும் புதுமை செய்த
என்னப்பன் கண்ணப்பும் அன்புச் செய்தி,
எழிற்கான வரலாற்றின் இசையே யன்ருே! 14

வான்மீகரும் - புத்தரும்

வன்மீக ரருளுணர்ச்சி வெள்ளம் பாய்ந்து
வளராதி காவியமாய் வழிநூல் தோற்றும்
இன்பநிலை ஊற்றெடுத்த இராம காதை
எழுந்தஇடம் பெருங்காட்டி லன்றோ! கேண்மின்!!
மன்னவனாய் வாழ்ந்தலுத்த மகன்சித் தார்த்தன்
மரத்தடியிற் றவங்கிடந்து ஞானம் பெற்ற
இன்னபிற செய்தியெலாம் இயற்கைக் காட்டின்
எழில்காட்டி யினங்காட்டுஞ் செய்தி யன்றோ! 15

தேன்வண்டின் அருப்பெருமை

தவப்பெரியார் அடித்தூளி தலைமேற் கொள்ளல்
தழைத்தின்ப நலங்கனிந்த வாழ்வாம் என்பர்;
உவப்புறவே தேன்வண்டு மலர்மேற் சென்றே
உறிஞ்சியபின் காலடியில் ஒட்டுந் தாது
துவக்கறமற் றொருமலரின் தலைமேற் கொள்ளத்
தோற்றந்தான் கனியாகி வாழ்வா மன்றோ!
குவித்திரண்டு கையாலும் கானம் பாடிக்
கொண்டாடும் தும்பியடி குறித்துப் பாடீர்! 16

காதலும் வீரமும்

கோட்டுமுல்லை சூடிவருங் கொம்புக் காளை
குறித்தெழுந்த திருமணத்தின் பணயம் ஆகி
வாட்டமின்றி வலம்வருதல் கண்ட வீரன்
வருங்காத லாயமகள் மார்பே போல
வேட்டெழுந்து விரிகொம்பின் இடையே தாவி
வெற்றிகொண்டு காதலொடு வீரங் காட்டும்
காட்டுமுல்லைச் செயலெல்லாம் கவிதை ஆக்கக்
கருணைசெய் கவியரங்கக் காடு வாழ்க! 17

1953

குடும்பக் காவியம்

பணியாள்

அவையடக்கம்:

அவைத்தலைமை ஏற்றிருக்கும்
அரசாங்கக் கவியேறே!
கவியரங்கம் ஏறவந்த
கவிக்குடும்பப் பெரும்புலவீர்!
புவியாளும் பொறுப்புடைய
பொதுமக்காள்! நும்மடியைக்
கவியாளும் பணியாளன்
கைகுவித்து வணங்குவனே! 1

தோற்றுவாய்:

காரெனவே கைவழங்கக் கவிதை வெள்ளம்
கரைபுரளக் கண்டுமனம் களித்த வள்ளல்,
தேரளிக்கக் கொடிமுல்லை செழித்து வாழ்ந்த
திருநாட்டின் இலக்கியங்கள் 'செல்லார்' கையில்
சீரழிந்தே உருக்குலையக் கண்டு நொந்து
சென்றெங்கும் பழஞ்சுவடி தேடிக் காத்தே
பாரறியப் பதிப்பித்த சாமி நாதன்
பைந்தமிழப் பணியாளெம் முன்னோன் போற்றி! 2

தலைவர்:- நாமக்கல் கவிஞர்
திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

பணியாள், இரத்தம் போல்பவன்

குடும்பத்தை உடம்பினுக்கே ஒப்புச் சொன்னுல்
குருதியென ஓடுபவன் பணியாள் ஆவான்,
உடம்பென்னும் மனையெங்கும் ஓடிச் செல்வான்
ஒழியாத பெருங்குப்பை ஒதுக்கிக் காப்பான்
நடுவிருந்தே யாவர்க்கும் நன்மை செய்வான்
நள்ளிரவும் ஒழிவின்றிப் பணிகள் கேட்பான்
கடுகளவும் முகஞ்சுழியான், கடமை செய்வான்
கண்கண்ட கற்பகமே பணியாள் என்பான். 3

பணியாளின்றி இவ்வுலகம் நடவாது

தங்குகின்ற இவ்வுலகப் பொருள்கள் எல்லாம்
தலைவணங்கும் பெரும்பொருளைச் செம்பொன்என்ருல்
அங்கதுபோல் மனிதரிலே பணியாள் என்பான்
அனைத்துலகும் தனதாக்கும் ஆற்றல் காணீர் !
இங்கிருந்து நாமெல்லாம் இன்பம் துய்க்க
இவ்வண்ணம் செய்தவனும் யாரே சொல்வீர் !
எங்கிருந்தும் சேவைசெயும் இனிமைப் பண்பால்
இவ்வுலகை வளர்த்திடுவான் பணியா ளன்ரே ! 4

காடு சென்ருலும் பணியாள் தேவை

காய்கதிரோன் வழிவந்த கனகச் செல்வர்
கைகேயி சூழ்வினையால் கானஞ் செல்ல
வேய்மருவு பணைத்தோளி சீதை யோடு
விளங்கக்கண் டுயிர்துடித்து விம்மி வீழ்ந்த
தாய்மனத்துச் சுமித்திரையாள் சற்றுத் தேறித்
தன்மைந்தன் இலக்குவனுக் கெடுத்துக் கூறும்
வாய்மொழிகள் கேட்டிட்டால் வனத்தி னுள்ளும்
வருபணியாள் தேவையெனும் வாய்மை காண்போம். 5

பணியாளின் இன்றியமையாமை

தாயமுதைச் சுவைத்தறியாக் குழந்தை உண்டு
தழலின்றி வெந்திட்ட உணவும் உண்டு
காய்தானும் பூவின்றி வளர்தல் உண்டு
காற்றில்லா வெற்றிடமும் வானத் துண்டு
ஆய்வுசெயின் பணியாளாம் அன்பன் இன்றி
அவனியிது நடந்திடுதல் உண்டோ? உண்டோ?
தூய்மலரில் தேனெடுக்கும் வண்டால் வையம்
துலங்குவதன் உண்மையினை உணர்ந்துகொள்வீர்!

புறநானூற்றுச் செய்தி

வளவர்கோப் பெருஞ்சோழன் வாய்மை வேந்தன்
வடக்கிருக்க மனந்துணிந்த வருத்தக் காலை
உளமொத்த உணர்ச்சியது உந்தச் சேர்ந்த
உத்தமனும் பிசிராந்தை உயர்வு நோக்கிக்
களமிருந்த புலத்துறையோர் வியப்பில் மூழ்கிக்
"கழிந்தாண்டு பலவாயும் நரையே யின்றிங்
கிளமையொடு மிருக்கின்றீர் யாங்கா" னென்ன
இசைத்திட்ட பொருள்மொழிகள் ஈதோகேண்மின்: 7

"மாண்புடைய மனையாட்டி வாய்க்கப் பெற்றேன்
மாநிலத்தே அறிவறிந்த மக்கள் பெற்றேன்
காண்பரிய என்மனத்தைக் கண்டு நாளும்
கணப்பொழுதில் பணியாற்றும் ஆளும்பெற்றேன்
சேண்பெரிய நாடாளும் எங்கள் வேந்தன்
செங்கோலன் ; அஃதன்றிச் சீலம் மிக்க
சான்றோர்கள் பலரும்யான் வாழும் ஊரில்
சந்திப்பேம் ஆதலினால் நரையே இல்லை." 8

நாவுக்கரசர் வாக்கு

என்றுரைக்கும் புறப்பாட்டுச் செய்தி யொன்றே
எம்பணியாள் ஏற்றங்கள் எடுத்துக் காட்டும்
அன்றுரைத்த அனுபவத்துப் பொருளின் பாடல்
அழியாத பேரின்பச் செல்வம் அன்றோ?
மன்றுதனில் ஆடுகின்ற மங்கை பங்கன்
மனமகிழ்ந்து பேர்சூட்டச் "சொல்லின் மன்னன்"
என்றிருந்த திருநாவுக் கரசும் சொன்னார்
"என்கடனும் பணிசெய்து கிடப்ப" தென்றே. 9

சுதந்திரத்தைக் காக்க உழைப்பு வேண்டும்

பல்லாண்டு பாரத்தை அடிமை யாக்கிப்
படுகுழியி லாழ்த்திவிட்ட பறங்கிப் பூதம்
கல்லெறிந்த மரத்திருந்த காக்கைக் கூட்டம்
கலகலெனப் பறந்தோடும் காட்சி போல
நில்லாமல் ஓடுதற்கே நிலைத்த சேவை
நெடுங்காலம் உயிர்கொடுத்துச் செய்த பல்லோர்
எல்லோரும் தலைவணங்கும் எம்மான் காந்தி
ஏற்றிவைத்த சுதந்திரமா மனைவி ளக்கை 10

அணையாது, காத்திடவே ஆட்கள் கோடி
அயராது உழைக்கின்ற பணியாள் தேவை;
இணையேது மில்லாத இயற்கைச் செல்வம்
எழில்வளங்கள் எத்தனைதான் இருந்திட்டாலும்,
துணையாகப் பெருந்தலைவர் சூழ்ந்த போதும்
சொன்னபடி செய்கின்ற பணியாள் இன்றேல்,
மணியான ஐந்தாண்டுத் திட்டம் போல
மதிப்பரிய திட்டத்தாற் பயனே இல்லை. 11

உழைக்கின்ற மனப்பான்மை நமக்கு வேண்டும்
உறுதியுள்ள உடலோடே ஊக்கம் வேண்டும்
தழைக்கின்ற விஞ்ஞான அறிவைச் சேர்த்துத்
தணியாத முன்னேற்றம் காண வேண்டும்
இழைக்கின்ற விதியென்ற ஏழ்மைப் பேச்சை
இங்கிருந்து பலகாதம் விரட்ட வேண்டும்
குழைக்கின்ற பஞ்சத்தால் கும்பி வாடும்
கோடானு கோடிப்பேர் வாழ வேண்டும். 12

சலவைதரு சட்டையொடு தருக்க வாதச்
சலியாத பேச்செல்லாம் ஓய வேண்டும்
நிலவுகின்ற ஏட்டுமுறைக் கல்வி மாறி,
நிலையான தொழிற்கல்வி வளர்ந்து நாளும்
பலவகையால் உழைக்கின்ற பயிற்சி தேடிப்
பட்டங்கள் விட்டொழிக்கும் படிப்பு வேண்டும்
உலவுகின்ற நடைப்பிணங்கள் ஒழிந்து, நாட்டில்
உழைப்பொன்றே உயிரென்னும் உணர்ச்சிவேண்டும். 13

பணியாள் வாழ்க

உழுதொழிலோர் துணிநெய்வோர் ஊரைக் காப்போர்
உறுதிமிகு மனைவகுப்போர் உயர்ந்த நீதி
வழுவாது செய்திடுவோர் வணிகர் வண்டி
வாகனங்கள் இயக்குகின்ற வலவர்; மற்றும்
அழகுதரு கலைப்பொருள்கள் ஆக்கும் செல்வர்
ஆசிரியர், அரசாங்கப் பணிகள் ஏற்றோர்
பழகுசிறு தொழிலாளர் என்னப் பல்கிப்
பாருலகைச் சீராக்கும் பணியாள் வாழ்க ! 14

1954

கம்பன் கண்டபடி

நகரம்

காப்பு

கவியரசன் தான்கண்ட
 கவின்நகரின் வளமெல்லாம்
கவியரங்கில் யான்பாடக்
 கணேசன்தாள் காப்பாமே. 1

அவை யடக்கம்

உள்ளத்தால் உலகளந்த கம்ப நாடன்
 ஒப்பரிய இராமகதை நாளுங் கேட்க
வெள்ளம்போல் திரண்டிங்கே ஒன்று கூடி
 வீற்றிருக்கும் பெரியோரே! அவையி லுள்ளீர்!
எள்ளரிய கவியரங்கத் தலைவ ரேறே!
 ஏழிசைபோல் பாடிவந்த எங்கு லத்தீர்!
உள்ளன்பால் அனைவருக்கும் வணக்கம் சொன்னேன்
 உயர்கவிதை யான்பாட உவந்து கேட்பீர்! 2

தலைவர்: திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்
அவர்கள் எம். ஏ; ஐ. ஏ. எஸ்.

தோற்றுவாய்

பாற்கடல் பள்ளி நீங்கிப்
பரமனே அயோத்தி வந்து
வேற்கணுள் சீதை மேய
விரிமலர் மிதிலை புக்கு
நாற்பெரும் படைகள் சாய
நளிர்கடல் இலங்கை செற்ற
நூற்பொருள் விரிக்கும் கம்பன்
நுவலுமா நகர்கள் மூன்றே. 3

அல்லையாண் டமைந்த மேனி
அழகன்மேல் அமர்ந்த காதல்
எல்லைகாண் கில்லா வேடன்
எயினர்மன் சிருங்கி பேரம்;
கல்லதர் கானம் சூழ்ந்த
கவிகள்கிட் கிந்தை மூதூர்
சொல்லினுற் சிறிதென் றுலும்
தொண்டினுற் பெரிதே யாமால்! 4

நாடும் நகரமும்

உலகெலாம் தழைத்து வாழ
உலாவரு சரயு பாய்ந்த
நிலமெலாம் வரம்பு கோலி
நீதியே விளைத்து நாளும்
நலமெலாம் பொலிந்த நாட்டின்
நாயகன் இருக்கை யான
அலகிலா அறங்கள் வாழும்
அயோத்திமா நகரம் சொல்வேன். 5

மதிலும் அகழியும்

தன்னிகரில் வசிட்டமுனி தவமெனவே ஓங்கித்
தயரதனுர் ஆணையெனத் தனியருமை எய்திக்
கன்னியரின் கற்பெனவே திண்மைநிலே பெற்றுக்
கடிநகரின் தடமதில்கள் கதிரவனை முட்டும்;
மன்னிவளர் சூழ்ச்சிமிகு மந்தரைபோ லாழ்ந்து
மதக்களிறு போலசையும் சுறவினங்கள் நெளிய
பொன்மதிலேச் சுற்றிநிதம் போர்புரிதல் போலப்
பொங்கிவரும் அகழிநிலே புகல்வதெளி தேயோ! 6

கட்டிடங்கள்

மெல்லியர் நடனம் ஆடும்
மேதகும் அரங்கம் ஓர்பால்
நல்லிளஞ் சிறுவர் ஓதும்
நற்கலேப் பள்ளி ஓர்பால்
பல்விதக் கலேகள் ஆயும்
பட்டிமண் டபங்கள் ஓர்பால்
மல்லுயர் தோளின் மைந்தர்
மறம்பயில் கூடம் ஓர்பால். 7

விருந்தினர் மாளிகை

குடிகளே உயிராய் எண்ணிக்
கோசலம் காக்கும் கோமான்
அடியிணை இறைஞ்சி நாளும்
அருந்திறை செலுத்தப் போந்த
முடியுடை மன்னர் வைகும்
மொய்கொள் பொன்தகடு வேய்ந்த
கொடிநிலேத் தவள மாடம்
குன்றென மிளிர்வ கோடி. 8

மனையறம்

இல்லறத் தினிதின் வைகும்
இளங்கொடி மாதர்க் கெல்லாம்
செல்வமும் கல்வி தாமும்
செவ்விதின் பூத்த லாலே
நல்குர வென்ன வந்தோர்
நலமுற நல்கி நாளும்
செல்விருந் தோம்ப லன்றிச்
சிந்தனை பிறிது முண்டோ? 9

இல்லாதன

உழவிலாக் கழனி இல்லை
உழைப்பிலா மனிதர் இல்லை
முழவிலாக் கழகம் இல்லை
முழங்கிடா அறமும் இல்லை
விழவிலா வீதி இல்லை
விருந்திலா மனையும் இல்லை
பழகிலாக் கலையும் இல்லை
பசிப்பிணிக் கிடமும் உண்டோ? 10

வரப்பெலாம் தேனை யுண்ட
வண்டுகள் சுருதி கூட்டப்
பரப்பெலாம் அன்ன மாடும்
பழநகர் அயோத்தி தன்னுள்
கரப்பவர் இன்மை யாலே
காவலும் இல்லை; யாதும்
இரப்பவர் இன்மை யாலே
ஈதலும் இல்லை ஆங்கே! 11

நிலவளம்

உறுபசியும் உளமொடுக்கும் ஓவாத பிணியும்
ஊறுசெயும் பல்குழுவும் உட்பகையும் இன்றி
சிறுமையிலாப் பொதுவுடைமை திசையெங்கும் நிலவத்
திருமகளின் வதனமெனத் தெய்வமணம் நாற
அறுவைமுதல் தொழில்வகைகள் அளப்பரிதா யோங்கி
ஆடலொடு பாடுகின்ற அருங்கலைகள் பல்கி
வறுமையொடு வள்ளலெனும் சொல்மறைந்து போன
வளநகர்கண் டிமைப்பிலராய் வானவரும் நின்றார்.

நீர் வளம்

செங்காவி மலர்வகைகள்
செழிக்கின்ற தடந்தோறும்
தீந்தேன் உண்ட

உங்கார மதுகரங்கள்
ஓங்காரச் சுதிகூட்டி
உயர்ந்து பாடத்

செங்கால மடவன்னம்
சிறைவிரித்து நடம்பயிலும்
சிறப்புக் கண்டு

தங்காலில் தனிநின்று
தவளநிறக் குருகினங்கள்
தவமே செய்யும் 13

அன்னையவள் சொந்தமெனும்
அமுதமொழி நிலத்தில்
அடியிட்ட கல்விவிதை
அறிவுமுளை விட்டு
பின்வளர்ந்து கேள்வியெனும்
பெருங்கிளைகள் போக்கிப்
பெருமுயற்சி யெனுமிலைகள்
பெற்றுமிக வோங்கி
அன்பரும்பி அருள்மணக்கும்
அறமலர்கள் பூத்தே
அணுகிடுவார் அகம்உருக்கி
அனைத்துயிரும் வாழ
இன்பமெனும் கனிபழுத்த
இயல்பிற்றே யம்மா!
இராமகதை விரித்துரைக்கும்
இலக்கியமா நகரே. 14

மிதிலை

தருமமே வடிவங்கொண்ட
தயரதன் உயிரே யான
கருநிறத் தழகின் வந்த
காதலன் வருகை நோக்கி
மருதமே மங்கைப் பெண்ணாய்
மணம்புணர் கோலம் காட்டி
இருதிள வேனில் ஏந்தி
எதிர்கொளும் மிதிலை கேண்மோ! 15

நகர நிலை

விண்ணில் நின்றன கொடிகள்; வீரர்
புண்ணில் நின்றன புகழே; மாதர்
பண்ணில் நின்றன பாடல்; மாந்தர்
கண்ணில் நின்றன கருணை மாரியே. 16

அடிபடக் காண்பது அரண்மனை முரசு
அலறிடக் காண்பது அடிமலர்க் கொலுசு
கடிபடக் காண்பது கன்னலின் துண்டு
கலங்கிடக் காண்பது கள்ளுணும் வண்டு
ஒடிபடக் காண்பது ஒண்மலர்க் காம்பு
ஒடுங்கிடக் காண்பது ஒன்னலர் வீம்பு
பொடிபடக் காண்பது பூசிய சாந்து
போரிடக் காண்பது பூங்கணை வேந்து. 17

காய்ந்திட வருவது கதிரவன் ஒளியே
தேய்ந்திட வருவது திங்களின் முகமே
சாய்ந்திட வருவது சாலிநெற் கதிரே
மாய்ந்திட வருவது மறிதிரை யலையே. 18

சனகன் செங்கோல்

மெய்ப்பொருள் உணர்ந்த ஞானி
மேலவன் சனக மன்னன்
கைத்தலம் வைத்த செங்கோல்
கன்னியர் நிறையைக் காத்து
மெய்த்தவர் நோன்பு போற்றி
மேவலர் பகையை மாற்றிப்
பொய்த்திடா வானஞ் சேர்க்கப்
பொலிந்தது மிதிலை யாட்சி! 19

பொழுது போக்கு

மழவிடை யேறு போல்வார்
மைந்தர்கள்; மயிலின் சாயல்
அழகுடை மாதர் ஆங்கே
அணிமனை முன்றில் தோறும்
குழவிகள் மழலைச் செவ்வாய்
கொஞ்சிடப் பொழுது போகும்
விழவயர் வீதி மூதூர்
விரும்புவர் அமர ரெல்லாம். 20

திறந்திடாக் கமலம்

சனகர்தம் குலத்தில் வந்து
தயரதன் மனையிற் சேர்ந்த
கனகமா மணிநி றத்துக்
காரிகை தோன்ற லாலே
தினகரன் வந்து நாளும்
திறந்திடாக் கமல மென்னப்
புனலிடைப் பொலிந்து தோன்றும்
பொன்னகர்க் கீடு முண்டோ? 21

இலங்கை

வாரணம் பொருத மார்பன்
வரையினை எடுத்த தோளன்
நாரத முனியை வென்று
நல்லிசை வீணை கொண்டோன்
காரண முதல்வ னாய
காகுத்தன் பகழிக் கன்றி
வீரமுங் கெடுத லில்லான்
விரிகடல் இலங்கை கேண்மோ: 22

ஆட்சிப்பெருமை

தேவர்கோன் நடுங்கத் திசையெலாம் நடுங்கத்
தென்புலக் கூற்றமும் நடுங்க, மேலை
மூவரும் நடுங்க, முற்றிய தவத்து
முனிவரும் நடுங்க, மூவுல குள்ளோர்
யாவரும் நடுங்க, ஈறிலா அறத்தோடு
எழிற்குலச் சீதை இதயமும் நடுங்கத்
தாவரும் தவத்தால் தனிக்குடை கவித்துத்
தனியர சாண்டனன் தசமுகன் கேளீர். 23

கொடிகள்

ஆதரித் தமுதில் கோல்தோய்த்
தவயவம் அமைக்கும் தன்மை
ஏதெனத் திகைத்தே இரவி
வர்மனு மெழுத வொண்ணுச்
சீதையைச் சிறையில் வைத்துத்
தீவினை நயந்து செய்த
பாதகன் பழியே யென்னப்
பறந்தன கொடிகள் வானில். 24

வண்ண மாடங்கள்

பத்தரை மாற்றுத் தங்கப்
பசும்பொனுல் சுவர்கள் கோலி
சித்திரப் பவளத் தூண்கள்
செம்மையின் நாட்டிப், பச்சை
வித்தக மரக தக்கை
விரித்துவிண் நிலவெ றிக்கும்
நித்திலப் பந்தர் வேய்ந்து
நிமிர்ந்தன மாடம் எங்கும். 25

ஊடலும் கூடலும்

வடித்திடும் நறவம் மாந்தும்
  வன்கணார் அரக்க மாதர்
நடித்திடும் ஊடல் தீர்க்க
  நயந்திடும் அரக்கர் தாமும்
குடித்திடும் வெறியின் போதை
  கூடிடக் குலவி ஆடும்;
படித்திடும் மதுவி லக்கைப்
  பார்ப்பரோ உணர்ச்சி கெட்டார்? 26

ஆடலும் ஆட்டலும்

கேட்டிடும் உலக மெல்லாம்
  கிடுகிடென் றயர்ந்து சோரப்
போட்டிடும் அணுக்குண் டர்போல்
  புவியினை ஆட்டி வைத்து
வாட்டிடும் அரக்கர் வீட்டில்
  வாசமென் கலவை நீரால்
ஆட்டிடும் அமரர் மாதர்
  ஆடுவர் அரக்கர் மாதர்! 27

இல்லாதன

வாயிலில் காவல் காத்து
  வாடிடும் பணியாள் மூலம்
கோயிலில் வீற்றி ருக்கும்
  கோமகன் இலஞ்சம் வாங்கிப்
பேயினும் பிடுங்கித் தின்று
  பிழைத்திடும் சிறுமை எல்லாம்
தாயினும் நாட்டைக் காக்கும்
  தசமுகன் நகரில் இல்லை. 28

அட்சரம் தெரியா மாக்கள்
அரசியல் சூழ்ச்சி யாலே
வெட்சிப்பூ மாலே சூடி
வீதிஊர் வலங்கள் வந்து
கட்சியின் பேரைச் சொல்லிக்
காசுகள் நிதிகள் சேர்த்துத்
தட்சணம் மறைந்து போகும்
தகிடுதத் தங்கள் இல்லே. 29

அரச குடும்பம்

வீரமே வடிவங் கொண்டான்
வேந்தனும்; மைந்தன் தானும்;
காரணம் உணர்ந்த தம்பி
கடமையே வாழ்க்கை யென்பான்;
ஆரண மறையே யன்னுன்
அடுத்தநல் இளேயான்; என்ருல்
வீரமா நகரை மேலும்
விரித்திடல் மிகையே யன்ரே? 30

ஒரே குற்றம்

செல்வமலி திருநகராம் இலங்கை தன்னேச்
செருக்குடனே தனியாண்ட இராவ ணேசன்
ஒல்கியசை நுண்ணிடையாள் மிதிலேப் பொன்னே
உள்ளமெனும் சிறைவைத்த ஒரேகுற் றத்தால்
பல்வளத்த அயோத்தியிறைப் பாணம் ஒன்ருல்
பரகதியே அடைந்திட்ட பாடல் சொன்ன
கல்விவல கம்பநாட் டாழ்வார் போற்றிக்
கவின்நகரின் வளமெல்லாம் கண்டு கொள்வீர்! 31

வணக்கம்

1955

கம்பன் கண்ட வண்ணம்

உண்மை

காப்பு

உண்மைக் கவிதை பாடுதற்கே
உழவர் கரத்தில் நடமாடும்
வெண்மைக் கமல மலர்மேவும்
வீணைக் கரத்தாள் காப்பாமே. 1

போற்றி

கம்பனைப் போற்றுதும் கம்பனைப் போற்றுதும்
அம்புவி மாந்தர் அனைவரும் துய்த்திட
இம்பர் அமுதளித்த லான்.

மன்றினைப் போற்றுதும் மன்றினைப் போற்றுதும்
தென்றமிழ்ப் பாவலர் சீர்மிக ஓங்கிட
என்றும் விழாவெடுத்த லான்.

உங்களைப் போற்றுதும் உங்களைப் போற்றுதும்
பொங்குங் கடல்போல் புதுமதி போற்றிட
இங்கண் எழுந்தருள்த லான். 2

தலைவர்: தமிழ்க்கடல். திரு. ராய. சொ. அவர்கள்.

அவைத்தலைவர்ப் போற்றி
அறிவுடையோர் அடிபோற்றிக்
கவியரங்கம் போற்றிக்
கவிவாணர் கழல்போற்றிச்
செவிசாய்க்கும் சீர்போற்றிச்
செந்தமிழர் தாள்போற்றிக்
கவியதனைப் பாடுகின்றேன்
கடைக்கணித்தே அருள்செய்வீர். 3

பொது உண்மை!

உண்மையினைப் பாடுகென்றே
உரைத்திடுதல் மிகஎளிது;
உண்மையினைப் பாடுதலோ
ஒப்பரிய செயலதுகாண்;
உண்மையினைக் கேட்டிடலோ
உலகத்தே மிகஅரிதாம்;
உண்மைநெறி ஒழுகிடலோ
அரிதரிது உண்மையிதே. 4

உள்ளுதொறும் மாந்தர்தமை
உயர்த்துகின்ற உண்மைகளை
வள்ளுவரும் குறளுருவில்
வடிகட்டித் தந்திட்டார்,
தெள்ளுதமிழ்க் கம்பனெனின்
தீங்கனியாய்க் கற்பனையாய்
அள்ளுகின்ற கவிதையினில்
அமைத்திட்டான் உண்மையிதே. 5

என்பெல்லாம் இனிப்பூட்டும் இராம காதை
எடுத்தாளும் உண்மையினை இயம்பக் கேண்மோ
மன்பதையாய் வாழுகின்ற மக்க ளெல்லாம்
மாநிலத்தில் பிறப்பொத்து நிற்றல் உண்மை
பின்புசெயும் தொழிலாலே பிரிவு பட்டே
பிழைக்கின்ற குணநிலையால் தனிவே றுவார்
அன்புசெயின் அந்தணராம் அழிவே செய்யின்
அரக்கரெனப் பேர்பெறுவர் உண்மை காண்மின். 6

போர்முகத்தில் மதகளிற்றைப் பொருது கொன்று
புறங்காணல் பேராண்மை ஆகும்; போரில்
நேரெதிர்ந்த மாற்றானுக் கொன்றுற் றக்கால்
நெடுங்கருணை காட்டிடுதல் அதனில் மேலாம்;
வார்தனத்துப் பிறன்மனையாள் வனப்பு நோக்கா
வல்லாண்மை மற்றிரண்டின் சிறப்பாம்; யாவும்
கார்முகத்துப் பெருவீரன், கருணை வள்ளல்
கற்புடையான் இராமனிடம் காண்மின் காண்மின்! 7

இலங்கைமா நகருண்ணும் எரியு முண்டோ
இராவணன்றன் தலைநகரைத் தீயோ கவ்வும்?
விலங்குசுட்ட சிறுநெருப்பு வீழ்த்தப் போமோ
விண்முட்ட ஓங்கிநின்ற வீரன் கோட்டை
நிலங்காக்கும் பெண்மையினை நிந்தை செய்தான்
நீள்நெருப்பாய் எழுந்ததுவே கற்புத் தெய்வம்,
கலங்காத உள்ளத்தார் உண்மை கண்டார்
கற்பென்னும் கனற்பிழம்பு கனிந்த தம்மா! 8

கண்டொன்று மாருகப் பழியே சொன்னுள்
காமத்தாற் கண்ணிழந்த காமக் கன்னி
வண்டொன்று தாமரையென் றெண்ணி வேந்தன்
வளர்தீயில் விழுந்திறந்த விட்டில் ஆனுன்,
ஒண்டொடியாள் சூர்ப்பநகைக் காற்றுத் தூண்ட
ஓங்கியெழு இராவணன்றன் காமத் தீயால்
தண்டொன்றும் அரக்கர்குலம் முழுதும் மாய்ந்த
தனியுண்மை கண்டிடுவீர் தீமை வீழ்க! 9

தங்குகின்ற குடிமக்கள் உடலாம், நாட்டைத்
தாங்குகின்ற முடிமன்னன் உயிராம் என்ற
சங்கத்தார் கொள்கையது காலப் போக்கால்
சலித்திடுதல் உய்த்துணர்ந்த கம்ப நாடன்
துங்கமுடி மன்னவனே உடலாய் மாற்றிச்
சூழ்ந்திருக்கும் குடிமக்கள் உயிரே என்ருன்,
இங்கதனைச் சொல்லிவைத்த காலம் ஓர்ந்தால்
எழிற்புலமைப் பெரும்புரட்சி உண்மை காண்பீர்! 10

காண்கின்ற ஐம்பூதக் கலப்பான இவ்வுலகில்
காண்பானுய்க் கட்புலனுய்க் காண்பொருளாய் உளதாகி
மாண்பிறந்த மாயையாய் மனமாகி மனங்கடந்த
மாயப்பொய்த் தோற்றமாய் மறைந்த நிலையாகிக்
காண்பானின் வேருகிக் காட்சிக்கும் அப்பாலாய்க்
காணப் படுபொருட்கும் கடந்த கருப்பொருளாய்
ஆண்பெண் அதுவென்ற அத்தனைக்கும் ஆருயிராய்
ஆகின்ற 'உண்மை' அதுகடவுள் என்றிட்டான். 11

மாமருந்தாம் இராமபிரான் வாழ்க்கை தன்னுல்
  மறைநிலத்தின் உண்மையெலாம் தெளியச் செய்து
காமநஞ்சாற் கலக்குண்ட இலங்கை வேந்தன்
  கடைப்போரில் வீரத்தின் வரம்பு காட்டிப்
பூமகளேச் சானகியைப் புலம்பச் செய்து
  பொங்குகின்ற கற்பனலின் திண்மை போற்றிக்
காமவல்லிக் காரிகையால் வஞ்சத் தாழம்
  காட்டிடுவான் "பஞ்சியொளிர்" சந்தக் கம்பன். 12

வண்மையினுல் தானளித்த வரங்கள் சூழ்ந்து
  வாளெனவே உயிரறுக்க வந்த போதும்
உண்மைக்கா உயிர்துறந்து மரபைக் காக்கும்
  உயர்நிலையைத் தயரதன்றன் வாழ்வால் காட்டி
நுண்மைமிகு அறிவாளன் காற்றின் மைந்தன்
  நோன்புடைய திருத்தொண்டன் அநுமன் வாழ்வால்
திண்மையெலாம் தனக்கின்றிப் பிறர்க்கே யாக்கும்
  தியாகத்தால் அமரநிலே தெளியச் செய்தான். 13

வளையாத வல்லாளன் இலக்கு வன்தான்
  வன்தொண்டே செய்வதற்கு வள்ளல் பின்னே
களையாத அடிமையெனக் கானஞ் சென்ருன்;
  கார்வண்ணப் பரதனெனின் கைக்கு வந்த
சுளையான அரசுரிமை தூரத் தள்ளித்
  தூய்மையொடு தன்நலத்து மறுப்புச் செய்தான்,
இளையார்கள் இருவருமே எடுத்துக் காட்டும்
  இவ்வுண்மை அறிந்திடுவீர் இன்பம் கொள்வீர். 14

புறத்தினல் பொய்வேடச் செம்மை காட்டிப்
பொல்லாங்குக் கருப்பதனை மறைத்து வைக்கும்
நிறத்தினல் குன்றிமணி ஒக்கும் மாக்கள்
நிலையதனை இராவணனல் நிறுத்துக் காட்டி
அறத்தின(று) ஈதெனவே எவரும் காண
அந்தணனும் வீடணனல் அறியச் செய்தே
திறத்தினல் தீந்தமிழிற் கவிதை பாடித்
திகழ்வையம் பாலித்தான் தெய்வக் கம்பன். 15

எல்லையிலாக் காதலுக்கோர் உருவம் தந்தே
எழிற்கலைஞன் ஷாஜஹான் எண்ணிச் செய்த
முல்லைநிற வெண்பளிங்கு நினைவுச் சின்னம்
மும்தாஜின் பெயர்விளக்கி நிற்றல் போல,
கல்லையொத்த கற்பினுக்கே கம்ப நாடன்
கவிதையினல் கோவில்கண் டதனுள் ஆங்கே
இல்லையெனும் சொல்லறியாச் சடையன் பேரை
ஏற்றிவைத்த செய்ந்நன்றி உண்மை காண்பீர். 16

உலப்பிலாத் தவம்செய்து வரங்கள் பெற்றே
ஒருகுடைக்கீழ் அரசாண்ட இலங்கை வேந்தன்
வெலப்படாப் போர்க்கருவி, வீரத் தோள்கள்
வெகுநீண்ட வாழ்நாளோ டாற்றல் எல்லாம்
கலப்பாலில் துளிநஞ்சு கலந்தா லென்னக்
காமமெனும் தீயொழுக்கால் மாயக் கண்டோம்,
உலப்பிலாப் பெருங்கவிஞன் உயிராய்ப் போற்றும்
உள்ளீடாம் பேருண்மை ஒழுக்கம் வாழ்க. 17

1956

எட்டுருவும் ஆன எழிற்கம்பன்

நிலமாம் கம்பன்

அஞ்சலி:

செல்வமலி முதுகுளத்தூர் சிறக்கத் தோன்றிச்
சேதுபதி ஆத்தானப் புலவ ணுகிக்
கல்விவல பெரும்புலவர் வியப்பில் மூழ்கக்
கலைகாட்டும் அட்டாவ தானம் காட்டி
வல்லகவி ராயனென்றே வையம் போற்ற
வாழ்ந்தசர வணப்பெருமாள் பாட்ட ஞரே!
நல்லகவி அரங்கத்தில் நானும் ஏற
நாவேறிக் கவிமாரி பொழிகு வாயே!

அவையடக்கம் [கலிவெண்பா]

காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்திப்
பாடுபட்டுச் சேர்த்த பணக்குவியல் அத்தனையும்

பாரியென மாரியென பண்டைக் குமணனென
வாரி வழங்கிவரும் வள்ளல் அழகப்பன்

தலைவர் : கலைமகள் ஆசிரியர்,
திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் எம், ஏ.

கல்லூரி தன்புகழால் காசினியில் தான்விளங்கும்
நல்லூராம் காரை நகரத்திற் பல்லாண்டாய்க்

கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ்வளர்க்கும்
நம்பன் கணேசன் நலம்சேர் திருக்கூட்டம்

பண்ணோ டிசைவளரப் பாவேந்தர் தாம்வளரக்
கண்போல் வளர்க்கும் கவியரங்கப் பேரவையில்

செந்தமிழைத் தேடித் தெருத்தெருவாய்த் தானலைந்து
சந்தப் பொதிகைத் தமிழ்முனிவன் தானாகிச்

சித்திரத்தில் தீட்டிச் சிலைசெய்து கும்பிடவே
அத்தன் கவிமணியின் ஆன்றதமிழ்ப் பாட்டாய்

விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டாதே, வேண்டும்
இருந்தமிழால் வாழ்ந்த இன்பத் தமிழ்ச்சாமி

நாதன் தனை நினைந்து நாளும் தமிழ்ச்சபையில்
பாதம் தனைப்பணியும் பண்பார் சகந்நாதப்

பேர்கொண் டிலங்கும் பெரியோய்! பேர்வானக்
கார்போல் கருத்துக் கவிமழையைத் தான்பொழியச்

சீர்ராய சொக்கலிங்கச் செம்மல் தனைக்கூடி
நேர்வந்து வீற்றிருக்கும் நேயத் தமிழ்ப்புலவீர்!

பாண்டித் தமிழ்நாட்டுப் பண்டைத் தமிழ்ச்சங்கம்
மீண்டிங்கே வந்ததென மேலோர் மனம்மகிழ

ஈண்டிங் கெழுந்தருளும் இன்பத் தமிழ்நாட்டீர்!
கூண்டில் அகப்பட்டேன் கூறும் வகையறியேன்

தின்னக் கனியிருக்கும் திக்கறியாக் காரணத்தால்
வன்னச் சிறுகிளிபோல் வாடி மிகமெலிந்தேன்

ஆனதால் நான்பாடும் அன்புத் தமிழ்க்கவியில்
போன படிநுழைந்து புன்குறைகள் காணுமல்

மண்பற்றும் பாடல் மறவா துளங்கொண்டே
கண்பற்றிக் காக்கக் கரங்குவித்தேன். கேட்டருள்வீர்!
கம்பன்சீர் காட்டும் கவி.

[குறள்]

அகழ்வாரைத் தாங்கும் அணிநிலத்தைப் பாட
இகழ்வாரு முண்டோ இனி.

அகவற்பா

[நூல்]

ஒல்காப் பெரும்புகழ் உயர்நூல் செய்த
தொல்காப் பியனெனும் தொல்பே ராசான்

நிலம்தீ நீர்வளி நெடுவிசும் பென்றே
கலந்தவைம் பூதக் கலவை காட்ட,

முடிநாக னென்னும் முதுமைப் புலவன்
அடிநாள் சேரன் அணிபுறப் பாட்டில்

மண்திணி நிலனே மாவிண் காற்றே
ஒண்தீப் புனலென ஒருபுது முறையால்

தொகுத்துக் காட்டத் தூமணி வாசகன்
வகுத்தே ஒடுங்கும் வகையைப் போற்றிப்

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி

தீயிடை மூன்ருய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி

வெளியிடை ஒன்ருய் விளைந்தாய் என்றே
ஒளிபெறச் சொன்ன ஒழுங்கைப் போற்றிப்

பிறைகதிர் உயிரெனப் பிழையா தமைத்து
நிறைமதிக் கம்பன் நெடும்புகழ் பாட

அட்ட மூர்த்தி அவனரு ளாலே
எட்டுக் கவிஞர் இங்குளா ரெனினும்:

கலிவெண்பா

மண்ணுன மூர்த்தி மணிப்பெருமை நான்பேசில்
எண்வடிவும் ஒன்ருகி எல்லாம் இதிலடங்கக்

கண்டு களித்திடுவீர்! காட்டிடுவேன். காப்பியனும்
பண்டை முடிநாகன், பண்பாடும் வாசகனும்

பூதமுறை மாற்றிப் புகன்ருலும் பொய்யாதே
ஆதிமுதல் மண்ணென் றறைந்திட்டார். நீரறிவீர்!

சாட்சி எதற்கையா? சற்றேநீர் சிந்திப்பீர்!
ஆட்சி செயுந்தலைவர் அன்புப் பெருங்கவிஞர்

கேட்டிருக்கும் நீங்கள் கேளாத அஃறிணைகள்
போட்டிருக்கும் காவணமும், போடாத ஆகாயம்

ஆடிவரும் காற்றும், அணையாத ஊதுவத்தீ
ஓடிவரும் நீர்ப்பொருளும், உள்ளிருக்கும் பொற்சிலையும்

ஆனை ஒலிபெருக்கி அத்தனையும் தாங்குவதாய்ப்
பானைவடி வாகிப் பரம்பொருளாய் மேலாகி

பன்னிரண் டாயிரமாய்ப் பண்பார் கவியாகி
மன்னுதமிழ் மாதின் மணிமுடியில் வீற்றிருக்கும்

எட்டுருவும் ஆன எழிற்கம்பன் காவியத்தைத்
தொட்டுநீர் கற்கத் துலங்கும் பொருள்கேளீர்.

வானமழை பேராழி வாச மலையருவி
தேனுந்து பேராறு சேரும் சிறுநதிகள்
கங்கை சரயுவொடு காவிரியாம் நீர்ப்பொருளும்,

செங்கை பலநீட்டிச் சீரான தென்னிலங்கை
மங்க எரியூட்டும் மாருதியின் வாலிடத்தும்,

நங்கை சிறையிருந்த நாயகியாள் மேலிருந்த
சந்தேகம் தீரச் சகத்தோர் தெளிவடைய

வந்துசீ ராமன் வளர்த்த பெருநெருப்பும்,
"ஈரேழாம் ஆண்டில் இளவலே நான்திரும்பி

வாரேன்" எனச்சொன்ன வள்ளல் திருவார்த்தை
ஈடேறக் காணு இளநம்பி நற்பரதன்
காடேற மூட்டும் கனலாம் எரிபொருளும்,

திங்கள் முடிசூடும் தென்பொதிகை மாமலையில்
சங்கத் தமிழ்ச்சுவையில் சந்தணத்து மாமணத்தில்
முல்லை நறுமலரில் மூழ்கிப் பதமாகி
மெல்லத் தவழ்நடந்து மேவும் தமிழ்த்தென்றல்,

ஊனைக் கடித்திழுக்க உள்ளெலும்பும் தான்நடுங்க
வானம் பனிக்க வளருயிர்கள் வாட்டமுற
நீசத் தனம்கொண்டு நீர்ப்பரப்பைக் கல்லாக்கி
வாச மலர்க்கருக்கும் வாடை வடகாற்று,

கீழ்த்திசையில் தோன்றிக் கிளர்ந்துவரு கொண்டலொடு
பாழ்த்தபெருங் கோடைப் பருவத்து மேல்காற்றும்,

நீலத் திரைக்கடல்போல் நேமி நிறங்காட்டிக்
கோலக் கடவுள் குறிகாட்டும் வான்வெளியும்,

வாசக் கருங்குவளை வாய்மலர்ந்து தேனூற்ற
ஈசன் திருச்சடைமேல் ஏறிப் பிறையாகி
எங்கள் சடையப்பன் ஏர்புகழாய் வெண்மதியாய்த்
திங்கள் எனஉலவும் தெய்வத் திருவிளக்கும்,

தங்கம் உருக்கித் தழல்குறைத்துத் தேனுக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமாய்ப் பாரதிக்கு
இன்பவெறி யேற்றி இறைவன் சடைபோல
அன்புக் கதிர்விரித்து அங்கங்கே தன்குறிப்பை
ஏற்றிப் புலவரெலாம் ஏறிப் பவனிவரத்
தோற்றி மலையேறும் துய்ய தனிச்சுடரும்,

பெண்ணில் பெருங்கற்பாய்ப் பேச்சொலியிற் சொற்பொருளாய்
எண்ணில் நினைப்பெட்டா ஈறில்லாத் தத்துவமாய்
ஆண்மகனுள் ஆற்றல் அருவாய், எவராலும்
காண்பரிய நுண்பொருளாய்க் கட்டுக் கடங்காதே
வேண்டும் உடற்கூட்டில் வேடிக்கை யாய்ப்புகுந்து
தூண்டிப் பிரிந்தோடித் தொல்லுலகை ஆட்டும்
கருத்துப் பொருள்கள் கவிதைஉருத் தாங்கி
விருத்தக் கவியாய் விளங்கும் உயிர்ப்பொருளும்,
ஆகப் பொருளெட்டாய் ஆனாலும் செந்தமிழாம்
ஏகப் பொருள்பெறுவீர்! இன்னும் சிலகேளீர்!

முல்லை குறிஞ்சி முதுபாலை நெய்தலொடு
நல்ல மருதமெனும் நாடுபுகழ் ஐந்திணையை
பாலகாண் டம்மருதம் பாண்முல்லை ஆரணியம்
கோலக் குறிஞ்சி குரக்கினத்துக் கிட்கிந்தை
போர்செய் நெடுங்காண்டம் பொன்னிலங்கை நெய்தலொடு
சீர்கெட்டுப் போய்த்திரிந்த செம்பாலை அங்கங்கே
ஏற்ற உவமையோ டெங்கம்பன் தாங்கிடுவான்.

ஆற்றப் பெரியான் அவன்தந்த பேருலகைத்
தோண்டினுற் பொன்வெள்ளி தூய மணிப்பொருள்கள்
வேண்டிநீர் பெற்றே வியன்செல்வர் ஆகிடலாம்.
சிந்துநதிப் போக்கில் சிதைந்துவிட்ட நாகரிகம்
விந்தை தருவதுபோல் வேண்டினுலிம் மண்ணில்

மறைந்துவிட்ட சொற்கள் மரபாட்சி பண்பு
நிறைந்திருக்கக் கண்டிடலாம். நீண்ட புகழ்சேர்ப்பீர்!

மண்டலம் கோட்டங்கள் மாவட்டம் கூற்றங்கள்
கண்டம் எனச்சொல்லிக் கண்டதுண்டம் செய்தாலும்

பூவலயம் ஒன்றே பொதுவென் றறைந்திட்டான்
நாவரச சன்கம்பன் நல்லமதி காணீர்!

இவன்பெருமை சொல்ல எனக்குமுடி யாதென்
றவன்பெருமை சொல்ல அனந்தனுக்கே ஆள்விட்டேன்.

ஆயிரவாய்ப் பாம்போ அவன்பெருமை காட்டுதற்குப்
பாயிரமும் பாடாமல் பாருலகைத் தன்தலைமேல்
தூக்கிவைத் துக்காட்டும் தொல்பெருமை நீரறிவீர்!

ஆக்கியளித் துலகை அழிக்கும் பரம்பொருளே
நெற்றிக்கண் காட்டி நெருப்பாகச் சுட்டாலும்

குற்றந்தான் குற்றமெனும் கொள்கைப் பிடிப்புடையான்
பத்துப்பாட் டென்னும் பழம்பாட்டின் முன்னிருக்கும்

முத்துமுதற் பாட்டாம் முருகாற்றுப் பாமுதலாய்
முத்திதரு ஆறுபத்து மூவர் திருக்கதையைப்

பத்திச் சுவைசொட்டப் பாடும் கவிவலவன்
ஆதியிலும் பாதியிலும் அந்தத்தும் பாராட்டும்
சோதி வடிவழகைச் சொல்லரிய தொல்லுலகைச்

சொல்லிநான் காட்டத் துணிந்ததுவும் பேதமையே!
வல்லான் செயலாளன் வாய்க்கஞ்சி இங்குநின்றேன்.

மன்னிப்பாய் மண்மகளே! மாகவி ஞன்கம்பன்
தன்னிதயத் தெய்வதமே! தாமரையின் வாழ்முதலே!

ஞான முனிசனகன் நற்செல்வப் பூம்பாவாய்!
கானக் குகவேடன் கைகூப்பும் பொற்கொழுந்தி!

ஆதிகவி வான்மீகன் அன்பிற் பிறந்தவளே!
சீதையெனும் கற்பே! திருமகளே! ராமகதைக்

காவியத்தின் உட்பொருளே! கண்ணன்வாய் கண்டவட்கே
ஓவிய மாய்த்தோற்றி உண்மை தெளிவித்தோய்!

வையை கரைபுரள வந்திதரும் பிட்டருந்தும்
ஐயன் தலையேறும் ஆங்கார மண்மகளே!

பாற்கடலிற் கண்வளர்ந்தும் பண்ணும் சிறுகுறும்பால்
காற்சுவையைத் தான்தேடிக் கட்டை விரல்சுவைக்கும்

தாயில் தனிப்பெருமாள் தன்வாய் உணவாகி
வாயில் உயிரினங்கள் வாழும் கருணையினால்

புல்லாக்கிப் பூடாய்ப் புதராய் மரமாக்கிப்
பல்கொடிக ளாக்கிப் பசுமை இலையாக்கிக்

காயாய்க் கனியாக்கிக் கண்போல் உணவாக்கித்
தாயாகிக் காக்கும் தரைமகளே கற்பகமே!

உன்பெருமை இவ்வளவோ! ஓதுங் கவியெல்லாம்
என்சிறுமை அவ்வளவே இங்குரைத்தேன் எங்கம்பன்

கையில் நவரசமாய்க் காட்சிதரு நாடகமாய்
வையத் திருள்நீக்கும் வள்ளுவனுய், வாழ்வில்

எனக்குவரும் இன்னல் இடரெல்லாம் போக்கும்
தனக்குவமை இல்லாத் தமிழ்மொழியை நான்வாழ்த்திக்
கும்பிட்டுக் கொண்டேன் விடை.

1957

எண்சுவைக் கம்பன்

இளிவரல்

காப்பு :

அளிமுரலும் காரை
அரங்கத்தில் ஏறி
இளிவரலைப் பாடென்ருர்
என்னே — களிகூர்ந்து
நம்பிக்கை வாக்களிக்கும்
நற்கவிதை பாடுதற்குத்
தும்பிக்கை யானே துணை. 1

வணக்கம் :

திருத்தொண்டர் புராணமெனும் கடலுள் மூழ்கித்
தினந்தோறும் முத்தெடுத்துக் குவித்து வைக்கும்
திருத்தொண்டே செய்தமையால் பட்டம் பெற்ற
திருத்தந்தைக் கொருமைந்தா! சிறந்த நண்பா!
கருத்துவரு மேகம்போல் இடித்து மின்னிக்
கருத்துமழை பொழிகின்ற சொல்லின் செல்வா!
பொருத்தமுள கவியரங்கத் தலைமை ஏற்ருய்!
பொற்கவிதை புனைந்திடுவேன். வணக்கம் கொள்க! 2

தலைவர்: பேராசிரியர்
திரு. அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள். எம். ஏ.

எண்சுவையுள் இளிவரலைப் பாட வேண்டும்
    எளிதாக அருவருப்பென் றிதனைச் சொல்வார்
பண்சுமந்த பாற்கடலாம் இராம காதைப்
    பாநயங்கள் சுவைத்தார்க்கு, வெள்ளி போன்ற
மண்சுவைதேர் வான்கோழிப் புலவர் யாத்த
    மாறுபட்ட இடைச்செருகற் செய்யு ளெல்லாம்
கண்சுருக்கி முகஞ்சுளிக்க அருவ ருப்பாய்க்
    கசப்புணர்ச்சி ஊட்டுகின்ற காட்சி காணீர். 3

நூல்வல்ல சான்றோர்தம் அவையுள், பள்ளி
    நுழைந்தறியாப் பேதைசென்று வீற்றி ருத்தல்
பால்நுரைபோற் பரந்தமலர்ப் படுக்கை தன்னில்
    படவேண்டாப் பொருள்பட்டுப் பழுது பட்ட
கால்வைத்து மிதித்தலொக்கு மென்று சொன்ன
    கருத்துரைக்கும் திருக்குறளின் நுட்பம் கண்டால்
சால்புடையீர்! இளிவரலின் சார மெல்லாம்
    சட்டென்று தெளிவாகப் புரிந்து போகும். 4

நரியிருந்த பெருங்காட்டை நகர மாக்கி
    நாடோறும் அறிவொளியைப் பரப்பு கின்ற
விரிவடையும் கலைக்கூடம் பலவும் கண்டு
    வீட்டினையும் வழங்கிவிட்ட எங்கள் வள்ளல்,
அரியேறு போல்விளங்கும் அழகப் பாதான்
    அறவுணர்ச்சி மேலோங்க அள்ளி அள்ளிச்
சொரிகின்ற பொருள்கண்டு விதிர்வி திர்க்கும்
    சுயநலத்தார் இளிவரலுக் குவமை யுண்டோ? 5

துளக்கமிலா முறுக்குடைய இளமை நீங்கச்,
சுருங்கியதோல் முதுமையிலே தோன்றும் எண்ணம்,
இளக்கமென எதிர்ந்தாரை எள்ளல், எங்கும்
எதனையுமே மிகப்பெரிதாய் எண்ணி நைதல்,
உளக்கவலைப் பிணிபெருக்கி உழைப்பை எண்ணி,
ஒடுங்கிடுதல் இளிவரலாம்; உண்மை யாக
விளக்கெண்ணெய் குடித்தவரின் முகத்தில் தோன்றும்
விகாரமெலாம் இளிவரலின் மெய்ப்பா டம்மா. 6

பிறமனையை நோக்காத பெருமை கொண்ட
பேராண்மைத் தனிவீரன் இராம னுக்குப்
பிறமனையின் முகத்தழகைக் கண்ணுற் காண்டல்
பெரும்பிழையாம், இளிவரலாம்; பிறர்ந டுங்க
மறவலியால் உலகாண்ட இராவ ணற்கோ
மற்றதுவே கைலாயம், மந்த ரைக்கோ
அறநெறியால் முடிசூடும் அரச நீதி
அருவருப்பாம், அன்னாளின் முதுகுக் கூனல் 7

இரு சுவை:

நகையோடே இளிவரலை நமக்கு நல்க,
நாயகனார் பிரிவென்றால் நடுங்கிச் சோர்ந்து
புகையுண்ட குழற்சீதை அவலத் தோடு
பொறுக்காத இளிவரலைக் கொண்டாள், மற்றுச்
சிகைதன்னைச் சிற்றிடையாள் கையில் தந்தே
சீர்அழிந்தும் வாய்மைக்கா உயிர்து றந்த
பகைவென்ற தயரதற்கோ வரமி ரண்டும்
பருவரலோ டிளிவரலைப் பகிர்ந்த தம்மா. 8

ஒருகுடைக்கீழ் உலகாண்ட இலங்கை வேந்தன்
ஊர்வசியாள் மேனகையா ளரம்பை போல்வார்
மருவுதற்குக் காத்துநிற்க, மணந்து கொண்ட
மனைவியர்கள் வேறிருக்க, மையல் மீறித்
திருமகளைக் கற்பனலைத் தீண்டு தற்கே
திருமுடிகள் மண்தோய வீழ்ந்து கெஞ்சும்
அருமையழி காட்சியினிற் கம்ப நாடன்
அமைத்தசுவை இளிவரலாம் ஆய்ந்து கொள்வீர். 9

மண்ணுலகை நடுங்கவைத்த இராவ ணேசன்
மற்றொருவன் மனையாளின் காலில் வீழ்ந்த
கண்வெருவும் காட்சியது கண்டோம்; ஆனால்
காகுத்தன் தனைப்பயந்த மன்னர் மன்னன்
விண்ணுலகை இந்திரற்கே வென்று தந்த
வேல்வேந்தன் வீட்டினில்தன் மனையாள் காலில்
மண்படவே வீழ்ந்துருகிக் கெஞ்சிக் கெஞ்சி
மயக்குற்ற இளிவரலை மறக்கப் போமோ? 10

மூக்கறுந்த சூர்ப்பநகை முகமும், போரில்
முண்டமென உறுப்புக்கள் குறைக்கப் பட்ட
வாக்கிறந்த உடன்பிறந்தார் வாஞ்சை கொண்ட
வடுவில்லாக் கும்பகர்ணன் வடிவும், வேறு
போக்கின்றிப் பொருளையெலாம் வாரிக் கையால்
போட்டுவைக்கும் பெருவயிறே வாயாக் கொண்ட
ஆக்கைபெற்ற கவந்தனது வயிறும் காண
அருவருப்புச் சுவையுணர்வே தோன்றும் அன்றோ? 11

பெண்மைக்கே ஒவ்வாது தானே சென்று
பெருங்காமம் பிதற்றிவிட்ட பெண்ணின் பேச்சும்,
பெண்ணங்கைத் தண்டிக்க வரம்பு மீறிப்
பெருவீரன் மூக்கரிந்த செயலும், சீதைப்
பெண்மயிலாள் இலக்குவனைப் போகச் செய்யப்
பேசிநின்ற பிழைபட்ட பேச்சு மெல்லாம்
உண்மையிலே நடுநிலையில் நின்றே ஆய்ந்தால்
உள்ளத்தில் அருவருப்பை ஊட்டல் காண்பீர். 12

பொய்யுரையாப் புண்ணியனும் வாலி மைந்தன்
பொருந்தார்பால் தூதாகச் சென்ற போழ்தில்
கைமலைபோல் வீற்றிருந்த இராவ ணேசன்
களிப்புடனே மைந்தாவா வென்ற ழைத்து
மெய்யாகக் கிட்கிந்தை மன்ன னுவாய்,
மேலுன்றன் தந்தையினைக் கொன்ற பாவிக்
கையாளாய் இருந்திட்ட பிழையும் தீர்ப்பாய்,
கவியரசாய் நான்மகுடம் சூட்டி வைப்பேன், 13

என்றுரைக்கக் கேட்டிருந்த அங்க தன்தான்
இளிவரலுச் சுவையினுக்கோர் எடுத்துக் காட்டாய்
நன்றுநன்றுன் உபதேசம்! அடடா! என்னே!
"நாய்தரவே நல்லரசைச் சீயம் கொள்ளும்"
உன்றனது கதைகேட்க ஊர்சி ரிக்கும்
ஒருவனுக்குத் தூதுவந்தே அரச னுதல்
என்றுரைத்தே இருகையும் கொட்டி யார்த்தவ்
விலங்கைநகர் குலுங்கிட்டவே எள்ளி நக்கான். 14

முன்னாளில் அரசியென முடித ரித்து
முத்தமிழாய்க் கிளைத்தோங்கிச் சங்கம் ஏறி
மன்னவர்கள் பாராட்ட மக்கள் போற்ற
மாநிலத்து முதற்பொருளாய்ச் செங்கோ லோச்சித்
தென்னாட்டில் புகழ்பரப்பித் திசைகள் எங்கும்
சென்றுலவி வலம்வந்த தமிழாம் அன்னை
இந்நாளில் பயிற்சிமொழி ஆகக் கூட
இல்லாத இளிவரலை எழுதப் போமோ? 15

தமிழ்மொழியைத் தாய்மொழியாய் வாய்க்கப் பெற்ற
தவமுடைய திருநாட்டீர்! ஒன்று கேண்மின்
தமிழ்மொழியைப் பேசுகின்றோம், தமிழர் நாங்கள்
தலையான நாகரிகம் எமதென் றேத்தி
இமிழ்கடல்போல் முழங்குகின்றோம், ஆனால் அந்தோ
இருக்கின்ற திருநிலத்தின் பெயரைக் கூடத்
"தமிழ்நாடு" என்றுசொலும் ஆண்மை யின்றித்
தலைகுனிந்து வாழ்கின்றோம்! வெட்கம்! வெட்கம்! 16

தமிழ்நாட்டில் தமிழரசு அமைதல் வேண்டும்
தாய்மொழியே பயிற்சிமொழி ஆதல் வேண்டும்,
இமிழ்சென்னை மாகாணப் பெயரை நீக்கி
இனிமைதரும் தமிழ்நாடென் றழைத்தல் வேண்டும்
அமிழ்தான பிறநாட்டுச் சாத்தி ரத்தின்
அறிவெல்லாம் தமிழ்மொழியில் ஆக்கல் வேண்டும்
கமழ்கவிதை நமக்களித்த கம்பன் போற்றிக்
கனிதமிழை வளர்த்திடுவோம்! கம்பன் வாழ்க! 17

எட்டுப்பத்து

வருகைப்பத்து

அஞ்சலி

கல்விச் சமுத்திரம் கமலா லயந்தமிழ்க்
கடல்மடை திறந்த வெள்ளம்
கற்பனை பிறப்பிடம் கலைமக ளிருப்பிடம்
கவிமாரி பொழியு மேகம்

சொல்விற் பனத்துறை முதுகுளத் தூர்வந்த
தோன்றல்எங் குலத்து முன்னோன்
சுகிர்தகுண அவதானி சரவணப் பெருமாளின்
துணையடிகள் அஞ்ச லிப்பாம்:

கல்விப் பணிக்கெனக் கடலெனப் புயலெனக்
கைகொண்ட மட்டும் வாரிக்
கலைவிளக் கேற்றிடும் மலைவிளக் காகிநம்
கண்கண்ட கொடைவி ளக்காய்ச்

செல்வப் பயன்பெற்ற அழகப்ப வள்ளலின்
திருமேனி கோயில் கொண்ட
திருக்கலைக் கோவில்கள் உருக்கிளர் காரையில்
(என்)திருக்க வியரங் கேறவே 1

தலைவர்: பன்மொழிப்புலவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள், எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.

பன்மொழியில் புலவரெனப் பாரோர் போற்றப்
பழகியவர் 'குருதேவன்' என்னச் சாற்றத்
தென்மொழியாம் பொற்கலத்தின் மீகான் என்றே
தெரிந்தவர்கள் பாராட்டச், செவ்வேள் போல
இன்மொழிகள் பாடிவரும் எண்மர் நாப்பண்
இளந்தோகை மயில்மிசையிங் கெழுந்த தேவா!
என்மொழிகள் கேட்பதற்கே வருகை தந்தாய்
இருசெவியும் தந்தருள இறைஞ்சு கின்றேன். 2

தொகையெட்டுப் பனுவலெனத் தொல்லோர் எண்ணும்
தொன்னெறியில் பிறழாமல் பத்துப் பாட்டை
வகைவகையாப் பாடுதற்கே அரங்கில் தோன்றி
வான்பிறைபோல் வீற்றிருக்கும் கவிவா ணர்க்கும்
தகைசான்ற பெரியோர்க்கும் தாய்மார் கட்கும்
தம்பியர்க்கும், பல்லாண்டாய்த் தடுத்து நின்ற
பகைவென்றே அரியணையில் மீண்டும் ஏறிப்
பரிமளிக்கும் தமிழ்த்தாய்க்கும் வணக்கம் சொன்னேன். 3

மதுவிரியும் மலர்சூழ்இம் மணியரங்கிற் கொலுவிருக்கும்
பதுமமலர்த் தாமரையாள் பாதமலர் தொழுதேத்தி
முதுபுலமைச் சொக்கலிங்கன் முடிவினிலே வாழ்த்தெடுக்கப்
புதுமுறையில்தொடங்குகிறேன் பொன்னவையீர்கேட்டருள்வீர்.

நூல்

தென்றலொடு சந்தனச் செண்பகச் செழுமலர்
தெருவெலாம் மணக்கு தெய்வத்
தென்பொதிகை முடியேறு திங்களஞ் செல்வனின்
திருமர பில்அவ தரித்த

தொன்றுபடு சீர்த்திப் பழங்குடிப் பாண்டியர்
தொடக்கி வைத்துப் புரக்கத்
தொல்லாணை நிறைமொழிப் புலவர்கள் சங்கமாத்
தொக்கிருந் தினிது கூடி

அன்றுவளர் தென்மதுரை அணிதிகழ் கபாடபுரம்
அடுத்துமா மதுரை தன்னில்
அம்மைதிரு மீனாட்சி அருட்கருணை என்னவே
ஆன்றோர் வளர்த்தெ டுத்த

என்றுமுள தென்றமிழ் இயம்பியிசை கொண்டவா!
இக்கண மெழுந்த ருள்கவே!
இளங்குழவி மழலையாம் என்கவிதை கேட்டிட
இக்கண மெழுந்த ருள்கவே! 5

அராவணைத் துயில்கின்ற பச்சைப் பசுங்கொண்டல்
அறிதுயில் யோகு நீங்கி
அருந்தமிழ்க் கனிகண்ணன் ஆணையின் வண்ணமே
அவனடிப் பின்தொ டர்ந்து

விராவரும் காஞ்சிப் பெரும்பதி பின்னிட
வேதா கமங்கள் எல்லாம்
விரிகின்ற நாண்மலர்க் கமலபா தங்களின்
வேத னையுணர்ந் தோலிடப்

பராவரும் செந்திருப் பாவைநல் லாளுடன்
பாம்பணைப் பாயல் தொடரப்
பைந்தமிழ்ப் பின்சென்ற பங்கயக் கண்ணனின்
பழமைக் கடல்க டைந்தே

இராமகதை அமுதத்தை எங்களுக் கீந்தவா!
இக்கண மெழுந்த ருள்கவே!
இளங்குழவி மழலையாம் என்கவிதை கேட்டிட
இக்கண மெழுந்த ருள்கவே! 6

உமையம்மை கேள்வனாய் உலகாண்ட எம்பிரான்
    ஒண்சுடர்ப் பெருங்கடவுளும்
  உக்கிரப் பெருவழுதி என்னுமோர் பேர்கொண்ட
    ஓராறு முகக்கடவுளும்

எமையாளும் வள்ளுவப் பெருந்தகை யாருடன்
    இளங்கோப் பெரும்புலவரும்
  இனிதமர்ந் தாராய்ந்த இணையிலாச் செந்தமிழ்
    இலக்கியக் கடல்குடித்துக்

கமைநெடுஞ் சூல்கொண்ட கவிச்சக்ர வர்த்திநீ
    காதலாற் பொழிந்துவைத்த
  கவிநறவ முண்டவுன் அடிமையாம் கணேசனார்
    கண்ணெனப் புரந்துகாக்கும்

இமையவர் வியக்கின்ற இவ்விழாக் கண்டிட
    இக்கண மெழுந்தருள்கவே!
  இளங்குழவி மழலையாம் என்கவிதை கேட்டிட
    இக்கண மெழுந் தருள்கவே! 7

வேறு

தொன்னெடுங் காலத்து முன்னரிவ் வையகம்
தோன் றிடாத்தொல் லூழியில்
தொடுகடற் சூழ்புனல் சுவறிடக் கல்முனை
தோன்றி மண்தோன் றுமுனம்

முன்னின்ற வாளோடு மூத்தநல் மாந்தரின்
முதல்ம கன்வாய்ப் பிறந்த
மூவாத செந்தமிழ் நாத்தழும் பேற்றிடும்
முத்தமிழ்ப் புலவ ரெல்லாம்

சென்னியைத் தாழ்த்தித் திரண்டுநின் முன்றிலில்
திறையொடுங் காத்து நிற்கச்
செங்கோல் செலுத்தியித் தென்னகச் சோலையில்
செவிநுகர் கனிவ ழங்கும்

கன்னித் தமிழ்க்கொரு பொன்னித் துறைதருங்
கவிக்கற் பகன்வ ருகவே!
காரைக் குடிக்கொரு பேரைக் கொடுத்திடும்
கம்ப நாடன் வருகவே! 8

கற்பதற் கேற்றநூற் கடலெனும் பனுவல்கள்
கசடறக் கற்று மேலும்
கற்றோர்கள் செந்நாக் கனிந்திடுங் கேள்வியால்
கருத்துப் பெருக்கம் உற்றுச்

சொற்களின் நேர்பொருள் சிறப்புக் குறிப்புத்
தொடர்புத் தொனிப்பொ ருளொடும்
சொற்றொடர் சேர்கையில் தொகைவகை விரியினால்
தோன்று நன்நயச் சிறப்பும்

கற்பனை அணிவகை மெய்ப்பாடு மரபியல்
கவிதைத் துறைமு றைகளும்
கற்றுத் தெளிந்ததால் கல்வியிற் பெரியனாய்க்
கலைவள்ள லாகி நின்ற

கற்பகக் கனிகளின் அற்புதச் சுவைதரும்
கவிக்கற் பகன்வ ருகவே!
காரைக் குடிக்கொரு பேரைக் கொடுத்திடும்
கம்ப நாடன் வருகவே! 9

வேறு

களத்திற் காணும் புறப்பொருளும்
காணா உவகை அகப்பொருளும்
கலந்து குழைந்த கதைப்பொருளைக்
கண்டு தெளிந்து புதுப்பொருளாய்க்

குளத்திற் பூவாத் தாமரைமேல்
குடிகொள் கல்விக் கோமகளின்
கொற்றஞ் சுடரும் மணிமகுடம்
குயிற்றிக் கொடுத்த கோமகனே!

உளத்தில் நினைக்க ஒளியூட்டும்
உண்மைப் புலவர் தமக்கெல்லாம்
ஒல்லும் வகையாற் கொடியேற்றி
உயர்ந்த விழாக்கள் எடுக்கின்ற

வளத்திற் பொலியும் காரைநகர்
வாழ்வே! வருக வருகவே!
வளரும் பொன்னித் திருவழுந்தூர்
வள்ளால்! வருக வருகவே! 10

துண்டப் பிறைசேர் கண்ணுதலின்
தொலையா நடனக் காட்சியினைத்
தோற்றும் சுடரின் மேலேற்றித்
தொடுத்துப் புனைந்த தூமணியே!

கொண்டல் தவழும் மணிமாடக்
கோட்டை யூரன் அழகப்பன்
கோடி கொடுத்துச் செய்தமைத்த
கோதில் கல்விச் சாலையெலாம்

கண்டு நீயும் கவியருளக்
காரைக் குடிக்கே வருகவெனக்
கவிதைச் செல்வர் சார்பாகக்
கவிஞர் பேரன் அழைக்கின்றேன்;

கண்டின் இனிக்கக் கவியருளும்
கம்பா வருக வருகவே!
கன்னித் தமிழின் சுவைபழுத்த
கனியே! வருக வருகவே! 11

காலம் துடைத்துக் கமழ்நாறும்
கவிதைச் செந்தேன் மதம்பொழியும்
களிறே வருக! கலைஞானக்
கடலே வருக! கற்பகத்தின்

சோலைப் புலவர் நினைந்தறியாச்
சுவையே வருக! துறைவிருத்தத்
தொடைத்தீந் தமிழி னிடைத்தோன்றும்
சுடரே வருக! சுவைக்கடலின்

மூலப் பொருளா யிலங்குகின்ற
முதலே வருக! முத்தமிழ்தேர்
முனியே வருக! முழங்குதமிழ்
முரசே வருக! முறைமருதக்

கோலப் பொன்னித் திருவழுந்தூர்க்
குமரா! வருக வருகவே!
குமரித் தமிழ்த்தாய் ஈன்றகலைக்
கோமான்! வருக வருகவே! 12

வேறு

உலக புகழ எமது மொழியில்
உலவு கவிதை யமுதமே!
உணரு மிதய முவகை நிறைய
ஒழுகு தமிழி னுததியே!

கலையி னறிவு முதிர முதிரக்
கமழு மதுர நறவமே!
கவிதை யழகு மதுர மொழுகு
கருணை பொழிநல் சுரபியே!

உலவு மொழியின் பொலிவு முழுதும்
ஒழுகு மமுத கிரணமே!
ஒழுகு தமிழி னிழுமென் மொழிகள்
பொழியு மழலை எழிலியே!

இலகு தமிழி னினிமை முதிர
எழுது கவிஞன் வருகவே!
இளமை தழுவு குமரி மொழியின்
இணையில் புலவன் வருகவே! 13

பழகு தமிழி னருமை யறியும்
பரமன் வருக வருகவே!
பழமை தழுவு கதையிற் புதுமை
பகரு கவிஞன் வருகவே!

ஒழுகு கருணை சடைய னிதய
மதலை வருக வருகவே!
உதவு சடையன் புகழை யெழுதும்
உதய முதல்வன் வருகவே!

அழகும் அருளும் அறனு முதவும்
அறிவன் வருக வருகவே!
அழக னிதய மொழுகு கருணை
அனைய புகழன் வருகவே!

இழுமென் மொழிகள் ஒழுகு மழலை
இனியன் வருக வருகவே!
இளமை தழுவு குமரி மொழியின்
இணையில் புலவன் வருகவே! 14

1959

கம்பன் வடித்த பண்புகள்

ஆண்மை

காப்பு கலிவெண்பா.

பொற்ரேளான் சேதுபதி பொன்னரங்கப் பேரவையில்
கற்ரேர்கள் மெச்சும் கவிராயன்—வற்ருத

மட்டூறும் தென்னகத்து மாமன்னர் பாராட்ட
அட்டாவ தானம்செய் ஆணழகன்—எட்டாக்

கவிதைக் கனிச்சாற்றில் காமரசங் கூட்டிச்
செவியினிக்கப் பாடும்சிங் காரன்—புவிதழைக்கப்

பந்தார் விறலிவிடு பாவனேயிற் பண்சுமந்த
பைந்தமிழைத் தூதுவிட்ட பண்பாளன்–மந்தரம்போல்

உந்து மதகளிற்றின் ஊர்தியொடு மன்னவர்கள்
வந்து பணிந்து வரவேற்கச்—சந்தமலி

சீட்டுக் கவிவிடுக்கும் சீராளன், எங்குலத்துப்
பாட்டன் எனவந்த பாட்டாளன்—ஈட்டுபுகழ்ச்

தலைவர்: பண்டிதவித்வான்
திரு. நா. கனகராஜையர் அவர்கள். எம். ஏ.

செல்வ முதுகுளத்தூர்த் தெய்வப் புலவோரின்
வல்லமையைக் காட்டிவரு வல்லாளன்—சொல்லருளும்

பேர்ச்சரவ ணப்பெருமாள் பெம்மான் மலர்ப்பாதச்
சீர்ச்சரவ ணத்தாளென் சென்னிமிசைச்–சேர்த்துவந்து

கம்பன் கலைமணக்கும் காவியப்பூஞ் சோலையிலே
தும்பி எனச்சுற்றும் தொல்லாண்மை காட்டுதற்கென்

செந்நாவில் வீற்றிருந்து செந்தேன் கவிபொழியக்
கன்னித் தமிழணங்கே காப்பு. 1

தோற்றுவாய்

ஆரத் தமிழும் வடமொழியும்
ஆய்ந்து தெளிந்த புலமையினால்
காரைப் பொருவும் கவிபொழியும்
கனக ராஜக் கவிராஜ!
காரைக் கம்பன் கழகத்துக்
கவிதை யரங்கத் தலைமகுடச்
சீரைத் தாங்கும் பொன்னரசே!
சிறியேன் வணக்கம் கொள்ளுதியால். 2

கம்பன் வடித்த பண்புகளில்
'கயமை' தவிரப் பிறவற்றை
உம்பர் வியக்கும் கவிபாடி
உணர்த்தப் போந்த பெரும்புலவீர்!
கம்பன் கவிதைச் சுவையுண்ணக்
கடல்போல் திரண்ட பேரவையீர்!
நம்பன் வணக்கம் ஏற்றருளி
நாளும் கருணை நல்குதிரால். 3

சொல்லாண்மை—தயரதன்

மன்னுயிராய்க் குடிமக்கள் உறைந்து வாழும்
மறுவில்லா நல்லுடலாய் உலகம் காத்தே
இன்னுயிரைக் கொன்றுழலும் கூற்ற மொக்கும்
இன்னுச்சொற் கைகேயி வரத்தைக் காக்கப்,
பொன்னுயிராய்க் காத்துவந்த வள்ளல் தன்னைப்
பொருவரிய பெருங்கானில் போக்கிப் பொன்ருத்
தன்னுயிரைப் பலிகொடுத்து வாய்மை காத்த
தயரதனுர் சொல்லாண்மை மரபு வாழ்க! 4

மரபாண்மை—பரதன்

தாய்கொண்ட வரத்தாலே தாதை ஈந்த
தரணியினைத் தீவினையென் றுதறித் தள்ளி
வேய்கொண்ட வெங்கானம் விரைந்து சென்றே
விரிகமலத் திருவடிகள் வேண்டிப் பெற்று
நாய்கொண்ட தவிசெனவே நந்தி தன்னுள்
நடுக்குற்ற குலமரபை நாட்டிக் காத்த
ஆய்கொண்ட அறவாழிப் பரதன் செய்கை
அறங்காக்கும் மரபாண்மைப் பண்பே யன்ருே? 5

அருளாண்மை—சடாயு

வெயிலிடையே அகப்பட்ட புழுவாய்ச் சீதை
வெம்பியுளம் துடிதுடித்துப் புலம்பும் ஓலம்,
உயிர்கிடக்க உடலைவிசும் பேற்றி ஞரென்
றுள்ளுருகும் புள்ளரசன் உணர்வைக் கவ்வ,
வயிரமணிப் படையரக்கன் வானத் தேரை
வன்சிறகால் கூர்நகத்தால் வளைத்துத் தாக்கி
உயிர்கொடுத்து நற்றெய்வ மரணம் உற்ற
உயிர்க்கொடைஞன் அருளாண்மைக்குவமையுண்டோ? 6

அடலாண்மை—கும்பகன்னன்

மறத்தாற்ருல் கூற்றுவனை ஆடல் கொண்ட
மலையனைய பேருருவன், மனத்து மாண்பால்
புறத்தாற்றில் எதிர்நின்று பொரவே வந்த
புண்ணியனைப்பரம்பொருளென்றுணர்ந்தமேலோன்;
அறத்தாற்றின் நுட்பமெலாம் வீட ணன்போல்
அறிந்திருந்தும்,அண்ண னுக்காஉயிரை ஈந்தோன்;
அறுத்தாற்றும் மருத்துவனுய்க் கடமை செய்த
அடலாண்மைக் கும்பகன்னன் அழிந்த பின்னும்; 7

போராண்மை—இந்திரசித்து

வெந்திறல்சேர் சிங்கத்தின் குருளை யோடு
விளையாடி வளர்த்திட்ட வீரத் தாலே
இந்திரனை இளமையிலே வெற்றி கொண்டே
இடிமேக நாதனென இசைக்கப் பெற்றுத்,
தந்திரத்துப் போர்முறைக்கோர் வரம்பு காட்டும்
தனியாண்மை வீரர்க்குள் வீர ஞன
மந்திரத்துப் போராண்மை மாயம் வல்ல
மாற்றில்லாத் தலைமைந்தன் மாய்ந்த பின்னும்; 8

பேராண்மைக்குறை — இராவணன்

தாரம்போல் பிறன்மனையை நினைந்த செய்கை
தலைபோக்கும் பழியெனவே அறிந்த பின்னும்,
ஓரம்பால் உலகையெலாம் கலக்கி வெல்லும்
உரனுடையான் இராமனென உணர்ந்த பின்னும்,
வீரம்போம் எனப்போரின் வெறியே கொண்ட
வெவ்வரக்கர் முடிவேந்தன், வீரன் விட்ட
பேரம்புக் கிலக்காகி மாண்டான்! அந்தோ!
பேராண்மை காமத்தால் அழியக் கண்டோம். 9

கதைமாட்சி

புறங்காட்டாத் திசைக்கரியைப் பொருத மார்பும்
புண்ணியன்வாழ் வெள்ளிமலை எடுத்த தோளும்
திறங்காட்டி வேதமொழி பயின்ற நாவும்
சிவன்தந்த வாளோடு நாளும் எல்லாம்
அறங்காவா தயலான்றன் மனையை நோக்கும்
அரும்பழியால் அழிந்துவிடல் திண்ண மென்றே,
மறங்காட்டும் இராவணனின் வீழ்ச்சி காட்டி
மதிகாட்டல் இராமகதை மாட்சி யன்றோ! 10

கற்பாண்மை — சீதை

தொண்டுமனத் தோளாண்மைச் சொல்லின் செல்வன்
துயர்க்கடலின் கரைகாணாத் தாயை நோக்கி
மண்டுபுனற் கடல்தாண்டிச் சுமந்து செல்வேன்
மாசில்லாய்! எழுந்தருள்க! என்னக் கேட்டுக்
கொண்டல்வணன் கோதண்டம் தனக்கு மாசு
கொடுத்திடுமென் றுளம்நாணி இருந்தே னல்லால்
ஒண்டொடியென் சொல்லொன்றால் உலகை வெல்வேன்
உத்தமனே! எனமறுத்த ஆண்மை வாழ்க! 11

தாயாண்மை — சுமித்திரை

மன்னவனும் தயரதன்றன் இளைய தேவி
மன்னறத்துச் சுமித்திரைதன் மகனை நோக்கி
பின்நிழல்போல் வள்ளலினைப் பிரிந்தி டாமல்
பெருங்காட்டிற் குற்றேவல் பணிகள் செய்து
நன்நகர்க்கே அவன்திரும்பி வரின்வா, அன்றேல்
நாயகற்கு முன்சென்று முடிவாய் என்னும்
தன்னிகரில் தாயாண்மைத் தகைமை காண்பீர்!
தாய்க்குலமாம், பெண்குலத்தின் ஆற்றல் வாழ்க! 12

பேராண்மை — இராமன்

முந்துதமிழ் இலக்கணத்தை வகுத்துப் போந்த
முனைவன்தொல் காப்பியனும், குறளா சானும்,
மந்திரம்போல் அகப்பொருளாய் அறமாய்க் காட்டும்
மற்றொருவன் மனைநோக்கா ஆண்மை யோடு;
செந்துவர்வாய்ச் சீதையினை அன்றி வேறோர்
திருமுகத்துப் பெண்ணாளை இப்பி றப்பில்
சிந்தையிலும் எண்ணுகிலேன் என்று செப்பும்
சீராமன் பேராண்மைக் கெல்லை யுண்டோ? 13

ஊராண்மை — இராமன்

பேராண்மைத் தறுகண்ணன் இலங்கை வேந்தன்
பெருங்களத்தி லெதிர்ப்பட்ட முதல்நாட் போரில்,
தேராண்மைப் படைமுதலாய் யாவும் தோற்றுத்
திக்கற்று வெறுங்கையாய் நின்ற போழ்தில்
ஊராண்மை அருளாளன் உவந்து நோக்கி
ஊர்க்குஇன்று போய்நாளை வருக வென்ற
கூராண்மை காட்டுதற்குக் கம்பனோ நான்?
கொடிகாட்டும் நம்நாட்டுக் குறிக்கோள் வெல்க! 14

கொடையாண்மை — அழகப்பன்

நந்தமிழ நாட்டார்கள் கல்வி பெற்று
நல்லறிவுச் சுடர்விளக்காய் நாளும் ஓங்கச்
சொந்தமனை ஆலையொடு தோட்டம் வீடு
தொகுத்திட்ட பொன்கோடி அள்ளி வீசி
அந்தமிலாப் புகழ்பெற்றிங் கருவாய் நிற்கும்
அழகப்பன் கொடையாண்மை அருளே போல,
நந்தலிலாப் பெருங்கவிஞன் புகழைப் பாடி
நாடோறும் தமிழ்வளர்க்கும் ஆண்மை வாழ்க! 15

1960

கம்பனில் காணும் சமயக் கருத்து

வைணவம்

அஞ்சலி கலிவெண்பா

சேதுபதி என்னும் திருப்பதியைக் காக்கின்ற
மாதுபதி வேந்தன் மனமகிழத்—தாதுவிரி

தாழை சிரமசைக்கத் தாமரைகள் வாய்நெகிழ
வாழை வணங்கி வரவேற்கத்—தாழுமலர்

ஞாழ லொடுவேங்கை நாகம் தளையவிழச்
சூழுமலர்த் தும்பி சுழன்ருேட—யாழிசையால்

ஏழுலக மெல்லாம் இளகிக் குழைந்துருக
ஏழிசையைப் பாடிவரும் ஏந்திழையாள்—மாழைமணிக்

கண்ணுதலை வெல்லுதற்கே காமன் கலைவிறலிப்
பெண்ணுய் வரவிடுத்த பேரழகோ!—விண்ணவரின்

சிந்தை மதிமயங்கத் தென்றல் நடைபயிலக்
கந்தங் கமழவரும் காரிகையோ!—மைந்தருடன்

தலைவர்: பேராசிரியர்
திரு. அ. சீனிவாசராகவன் அவர்கள். எம். ஏ.

தந்தச் சிலைபோலும் தையலரும் ஆசைகொள
வந்து வெறியூட்டும் வான்மதியோ!–விந்தைதரும்

சேமப் பொருள்வழங்கும் சிந்தா மணிதோற்கக்
காமச் சுவைவழங்கும் கற்பகமோ!—பாமணக்கும்

தெள்ளு தமிழ்மகளைத் தீண்டுவார் நெஞ்சையெலாம்
அள்ளுஞ் சிலம்பணிந்த ஆரணங்கோ!—எள்ளரிய

சந்தணத்துச் சேற்றில் தழைத்து வளர்ந்தோங்கிச்
செந்தேன் நறைபழுத்த செங்கரும்போ!—பைந்தமிழின்

சந்தக் கலிவெண்பாச் சாற்றில் உருவெடுத்துச்
சிந்தை குளிர்ப்பாட்டும் தேன்மழையோ!—சிந்துகவிப்

பாவலரின் நெட்டைப் பகற்கனவில் தோன்றுவதோர்
தேவதையோ வென்னத் திசையெங்கும்—நாவினிக்கத்

தீங்குரலிற் பாடித் தெளிந்த விறலியெனும்
பூங்குயி லைத்தூது போகவிட்டுத்—தேங்கமழும்

சீட்டுக் கவியுலகின் செங்கோலைக் கைப்பிடித்துப்
பாட்டுக் கரசனெனப் பாலித்து—நாட்டுபுகழ்

அட்டாவ தானத் தரியணையின் மீதேறி
முட்டாச் சிறப்பின் முடிசூடி—மட்டூறும்

செந்நெலொடு கன்னல் செழித்த முதுகுளத்தூர்க்
கன்னிநா டாண்ட கவிராயன்!—தன்னிகரில்

பேர்ச்'சரவ ணப்பெருமாள்' பெம்மான் மலரடியாம்
சீர்ச்சரவ ணப்பாதம் சேவித்தே—ஊர்ச்சபையாம்

கம்பன் கழகக் கவியரங்க மேறுகிறேன்
இம்பரெலாம் வாழ்க இனிது. 1

வல்லாண்ட கொங்கை வளையாடு செங்கை
வளர்மாது மங்கை வைகும்
அல்லாண்ட வண்ணத் தருளாண்ட செங்கண்
அவதார மாகி நின்ற
வில்லாண்ட வல்வில் விளையாடு 'ராம'
விழுநாமம் ஏத்து தற்கே,
சொல்லாண்ட கன்னித் துதிபாடும் பொன்னித்
துறையானைச் சென்னி வைப்பாம். 2

உம்பரது துயர்தீர்க்க உருவெடுத்து மானிடனாய்த்
தம்பியொடும் கான்போந்த தயரதனார் திருமகனைச்
செம்புலத்துச் சேரமுனி தேன்சிலம்புக் காப்பியத்தில்
அம்புயத்துத் திருமாலாய் அறிந்துரைத்த தமிழ்மரபைக்
கம்பனிலே காணாதார் கண்ணென்ன கண்ணே!
கண்ணிருந்தும் காணாதார் கண்ணென்ன கண்ணே! 3

செங்கனிவாய்க் கோசலையின் திருவயிற்றில் அவதரித்துக்
கொங்கலர்தார்த் தயரதனார் குலமரபுச் சொற்காக்கப்
பங்கயத்துத் தாள்நோவப் பரற்கானில் நடந்தேறித்
துங்கமணிச் சிலைவளைத்துத் தொல்லிலங்கை அழித்தபிரான்
செங்கரத்தின் சீர்கேளாச் செவியென்ன செவியே!
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே! 4

மூவுலகும் ஒருகுடைக்கீழ் முழுதாண்டு கோலோச்சித்
தேவிதனைச் சிறையெடுத்த தென்னிலங்கை ராவணனைச்
சேவகனுந் தம்பியுடன் சென்றழித்துத் திரைக்கையால்
காவிரியாள் அடிவருடக் கண்வளரும் கோமளத்தை
நாவினிக்கப் பாடாதார் நாவென்ன நாவே!
நாரணன்சீர் பாடாதார் நாவென்ன நாவே!, 5

அங்கணெடு மதில்புடைசூழ் அயோத்தி தன்னுள்
அவதரித்துப் புவியிருளை அகற்றிக் காத்த
செங்கணெடுங் கருமுகிலை இராமன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
கொங்குமணத் திருமாலாய்க் கொண்டு பாடும்
குடைக்'குலசே கரப்பெருமாள்' கொழித்து வைத்த
பொங்குதமிழ்த் 'திருமொழியைப்' புரிந்து கொண்டார்,
புகழ்க்கம்பன் வைணவத்தைப் புரிந்து கொள்வார். 6

அமிழ்தனைய வான்மீகன் கதைய மைப்பில்
அகப்பொருளும் சொல்லொலியும் அமைத்து மாற்றி
இழிழ்வளைசேர் ஆய்ச்சியரின் குரவைப் பாட்டில்
இளங்கோஅன்று, இராமனையே நெடுமா லாக்கும்
தமிழ்மரபை நிலைநிறுத்தி, ஆழ்வா ரான
தமிழ்க்குலசே கரப்பெருமாள் தடத்தில் ஏறிக்,
கமழ்கவிதைக் காப்பியத்தின் வரம்பு கண்ட
கம்பனைப்போல் தமிழ்மரபைக் காத்தார் யாரே? 7

செம்பொன்னாய்க் கரும்பொன்னைத் திரித்துக் காட்டும்
செப்பிடுவித் தைக்காரர் செயலே போலக்
கம்பனையே பிறமதமாய்க் காட்ட வந்த
கவிமதத்துப் பெரும்புலவீர்! ஒன்று கேண்மின்!
வம்பினிலே மாட்டிவைத்தார் அவரும் கேட்க!
வழிவழியாய்க் கம்பரையே ஆழ்வா ரென்னும்
நம்பு'மொழிச் சான்றி'ருக்கப் பறங்கிக் காயை
நடுச்சோற்றில் மறைத்திடுதல் நன்றோ சொல்வீர்! 8

இராமனையே பின்தொடந்து கானம் சேர்ந்த
இலக்குவனைப் பெருமாளென் றிசைக்கும் சொல்லும்
குராமலருங் கரைக்கங்கை எயினர் கோனைக்
குகப்பெருமாள் என்றழைக்கும் குறிப்புச் சொல்லும்
பராவுகுணக் கடலனைய பரத னோடே
பத்தியினால் அடைக்கலமாய்ப் பணிந்து சேர்ந்த
விராவுபுகழ் வீடணனைப் பண்டு தொட்டே
வியனுலகோர் ஆழ்வாராய் விரிக்கும் சொல்லும், 9

நுணங்கியநூற் கேள்வியினால் மலைபோல் ஓங்கி
நுவல்கவிக்கு நாயகனாய் விளங்கித் தோன்றும்
வணங்கியவாய் மாருதியை வைய கத்தார்
வான்'*சிறிய திருவடி*'யாய் வழுத்துஞ் சொல்லும்;
மணங்கமழுங் குழற்சீதை, மாயோன் மார்பில்
மலர்ந்த'*திரு மகளெ*'ன்றே வழங்கும் சொல்லும்
குணங்கமழும் புறச்சான்றாய்க் குறித்துக் கொண்மின்!
குலவுமகச் சான்றுக்குக் குறைவு முண்டோ! 10

கம்பன் கவிக் கூற்று

கொற்றமுடித் தயரதனின் குமரர்க் கெல்லாம்
குலகுருவாம் வசிட்டமுனி குறித்த நாளில்
பெற்றவரும் மற்றவரும் பெரிதும் போற்றப்
பெயரமைக்கும் திறம்பாடும் கம்ப நாடன்,
அற்றவர்க்குப் பெரும்புகலாய் அரவில் மேவும்
ஆதிமுதற் பொருளுக்கே இராம னென்று
கற்றமுனி பெயரீந்து களித்தா னென்றே
கவிக்கூற்றில் காட்டுகின்ற கருத்தையோர்மின். 11

கோசிகனின் ஆசிமொழி

ஐவண்ணத் தருந்தவத்தோன் வேள்வி காக்க
அன்றெடுத்த கோதண்டக் கன்னிப் போரில்
கைவண்ணங் காட்டி;ஒரு கல்லைப் பெண்ணாய்க்
கால்வண்ணத் தாலருளும் காட்சி கண்டே
மைவண்ணத் தண்ணலென இங்கு வந்தோன்
மண்ணுலகை வயிற்றடக்கும் மாயோ னென்றே
செய்வண்ணத் திறம்பேசித் தெளிவு செய்த
சினவண்ணத் திருமுனியை மறுப்பா ருண்டோ? 12

பரசுராமனின் பணிமொழி

கருங்கடலிற் பிரிந்ததிரு மகளைச் சேரக்
கண்ணுதலோன் வில்லொடித்து மணந்த காளை
மருங்குவந்த மழுவாளன் வழிம றித்தே
"மன்மகனே! மகிழற்க! வீர னென்னில்
இருங்கரத்துஎன் சிலைவளைப்பாய்" என்று கூற
இராகவனும் மிகவெளிதாக் குனித்து நிற்க,
"அருங்குணத்துத் திருமாலே நீயென் றேத்தி
அடிபணிந்த வரலாற்றை அறியீர் கொல்லோ? 13

விராதனின் வேதமொழி

பொங்கியெழும் சினத்தீயில் உருவம் பெற்றுப்
பொருப்பெனவே நிமிர்ந்தோங்கிப் பூத மஞ்சக்
கங்குலெனும் நிறம்பூசி நச்சுக் காலால்
கலிகாலம் நடப்பதெனக் கைகள் நீட்டிப்
பங்கயத்துச் செந்திருவைப் பற்றக் கண்ட
பரந்தாமன், கைதுணித்துக் காலால் எற்ற
வெங்குணத்து விராதனுமே விரிஞ்ச னாகி
வேதமெனப் பாடுகின்ற பொருளைக் கேண்மின். 14

பொருவரிய சமயங்கள் வேறு வேருய்ப்
போற்றுகின்ற தெய்வப்புத் தேளிர் எல்லாம்
இருவினையும் உடையவர்போல் இரங்கி ஏங்கி
இருந்தவங்கள் இயற்றுகின்ருர்; எழிலார் மேனித்
திருவுறையும் மணிமார்பா! தேவர்க்கு எல்லாம்
திருவமுது வழங்குகின்ற செல்வா! நீயோ
ஒருவினையும் இல்லான்போல் எந்த நாளும்
உறங்காதே உறங்குகின்ருய்! உண்மை என்னே? 15

வேதங்கள் அறைகின்ற உலக மெங்கும்
விரிந்துமலர்த் தேன்பொழியும் கிண்கி ணிப்பொற்
பாதங்கள் இவையென்னில்; பரந்த மேனிப்
படிவங்கள் எப்படியோ? பவளச் செவ்வாய்
நாதந்தான் எவ்வாருே? நறுந்தண் கோல
நயனங்கள் எங்ஙனமோ? நவில வொண்ணுப்
போதங்கொள் மெய்ப்பொருளே! பூதந் தோறும்
பூமணம்போல் உள்ளுறைந்து பொலிந்தா யன்றே! 16

காரானை ஓலமிடக் கடிதின் ஓடிக்
கராமலைந்து வீடளித்த கருணை வள்ளால்!
ஓராதே பிறந்துழலும் உயிர்கள் எல்லாம்
உனையறியா? நீயறியாப் பொருளு முண்டோ?
சாராதே உயிர்க்குயிராய்ச் சார்ந்து காக்கும்
தனிப்பொருளே! உன்மாயை அறிவார் யாரே?
வாராதே வரவல்லாய்! வந்து நின்ருய்!
வாழ்முதலே! எனப்போற்றும் வார்த்தை கேண்மின்! 17

குறுமுனியின் பொருள் மொழி

அன்றலர்ந்த தாமரையை வென்ற கண்ணன்
அடிக்கமலம் சிவப்பூற வழிந டந்தே
என்றுமுள தென்றமிழால் இசைகொண் டோங்கி
எழுந்தகுறு முனிவன்றன் இடத்தைச் சேரக்,
கன்றுதனைத் தழுவுமிளங் கறவை போலக்
கண்ணனின்நீர் மலர்தூவி உச்சி மோந்து
பொன்றுதலில் மெய்ப்பொருளே! என்று போற்றும்
பொருள்மொழிகள் நெடுமாலின் புகழே யன்றோ! 18

வாலியின் வாய்மொழி

கரதலத்தாற் கடல்கடைந்த மெய்யன், வாலில்
கட்டிவைத்தே இராவணனைக் கலங்க வைத்தோன்
பெருமிதத்தாற் சிறியனவே சிந்தி யாத
பேராளன் வாய்மொழியைச் சிறிது கேண்மின்!
பரமபதம் ஆளும்மெய்ப் பொருளே, பாரின்
பவமறுக்கச் சிலையேந்தி இராம னாகித்
தரைதோய நின்றதென்றான்! தமிழ றிந்தீர்!
தமிழ்க்கம்பன் சுவையறிந்தீர்! மறுப்பீர் கொல்லோ! 19

கும்பகன்னன் குறிப்பு மொழி

மற்போரில் கூற்றுவனை ஆடல் கொண்ட
மறங்கனலும் மலைத்தோளான் கும்ப கன்னன்
முற்பிறந்த அண்ணன்பால் வைத்த அன்பால்
முனைமுகத்துச் செருச்செய்ய முனைந்த போதும்,
விற்பிடித்து வந்துநின்றோன் திருமா லென்றே
வீடணனுக்கு எடுத்துரைக்கும் செய்தி யெல்லாம்
கற்பனையோ! கம்பன்றன் சமயங் காட்டும்
கண்ணாடிப் பளிக்கறையின் கதிரே யன்றோ! 20

அடைக்கலமே வைணவத்தின் அடிவேர்க் கொள்கை
அவ்வறத்தை வீடணன்பால் அறிந்து காமின்,
கொடைக்குணமே கொடியாகும், கொண்டல் வண்ணன்
கொள்ளார்தேம் குறித்தகொடைக் கொற்றம் தேர்மின்,
நடைக்குணமே உயிர்நாடி, அனுமன் செய்த
நல்லதிருத்தொண்டினையே மனத்துட் கொண்மின்,
உடைக்கோலம் திருநாமம் உச்சிக் கொண்டை
ஓர்ந்திட்டால் இவைதாமோ சமயம் அம்மா ! 21

அறங்காக்கப் போரிடுதல் ஆண்மை; உற்றார்
அன்புக்காய் உயிர்விடுதல் கடமை; போரில்
மறங்காட்டி மாளுதலே மாட்சி; மற்றோர்
மகிழத்தன் நலந்துறத்தல் வீரம் என்றால்;
மறுத்துயிரைப் புகழ்க்குவிற்ற சடாயு, கும்பன்
மாமேக நாதனொடும், பரதன் மூலம்
அறத்துறையாம் வைணவத்தின் ஆழங் காட்டும்
ஆழ்வாராம் கம்பனருட் சமயம் காணீர்! 22

புறச்சான்றும் அகச்சான்றும் பொருந்தக் கேட்ட
புலவீர்காள்! புகழ்க்கம்பன் சமயங் கண்டும்
அறச்சேதம் செய்யாதீர்! அன்பாற் சொன்னேன்!
அவனியெலாம் ஓரடியால் அளந்த மாயன்
மறச்செய்தி மறப்பீரோ? இளங்கோ செய்த
மலைப்பொழிவாம் சிலம்பொலியை மறுப்பீர் கொல்லோ!
மறைச்சுரும்பர் மொய்க்கின்ற கனியிருப்ப
மரக்காயைக் கவர்ந்திடுதல் மரபோ! சொன்மின்! 23

வருபொருளும் குலமுன்னோர் தேடி வைத்த
வான்பொருளும் கோடியென வழங்கிப் பின்னர்.
ஒருபொருளும் ஈவதற்கே உதவாப் போழ்தில்
உயிரினையும் தருமனுக்கே உவந்து தந்த
திருமகனும் "அழகப்பன்" செய்கை போலத்
திருமொழியைப் பயில்வார்க்கு வீடு நல்கும்
கருமணியைக் கோமளத்தைக் காயாம் பூவைக்
கார்முகிலை அஞ்சனத்தைக் கண்டு கொண்மின்! 24

தமிழ்நாட்டிற் பிறக்கின்ற பேறு பெற்ற
தன்னிகரில் சான்றோரே! தமிழைக் காக்க
இமிழ்கடல்போல் முழங்குகின்ற இளஞ்சிங்கங்காள்!
இன்றெனது கவிகேட்ட இனிய நெஞ்சீர்!
தமிழ்கொழித்த கணிகண்ணன் சொல்லைக் கேட்டுத்
தனிநடந்த மணிவண்ணன் தன்மை காணின்
அமிழ்தனைய மொழிகாக்கும் ஆதி மூலம்
அவன்கண்டீர்! அவனடிக்கீழ்ச் சேர வாரீர்! 25

1961

ஆறு துறை மேதை

காப்பியக் கலைஞன்

அஞ்சலி

இயலாயி ரங்கோடி பிரபந்த வகையெலாம்
இமைப்பொ ழுதினிற் பாடுவோன்
இசைபெறும் அட்டாவ தானஞ்செய் தெங்கணும்
எதிரிலாக் கீர்த்தி பெற்ரேன்,
நயமதுர முணர்கின்ற நற்குணப் பொறியிலா
நாற்றத் தொளைச் செவியிலே
நளினத் திருந்தமிழ்ச் செந்தேன் குழம்பையொரு
நாளும் கவித்தி டாதோன்,
செயராம நாதனே தெய்வமென் றேத்திடும்
சேதுபதி மணி வாசலிற்
சிறப்புறூஉம் சரவணப் பெருமாட் கவீச்சுரன்
திருவடி கள் அஞ்ச லிப்பாம் ;
புயலெனக் கைம்மாறு கருதாது கோடிபொன்
பொழிந்த அழகப்ப வள்ளல்
புகழ்வளர் காரையம் பதிவளர் கம்பனின்
பொற்கவி அரங்கேறவே ! 1

தலைவர். தமிழ்க்கடல். திரு. ராய. சொ. அவர்கள்.

அருள் வேட்டல்

அண்டமெனும் பெருவெளியில் அணுக்கள் தோன்றி
ஐயறிவாய் வளர்ந்திட்ட ஆதி நாளில்
மண்டுமெழிற் குமரியெனும் மாநிலத்தாய்
மாந்தரினக் குலக்கொழுந்தை மலைமேல் ஈன்று
விண்டுரைக்க மாட்டாத அவர்தம் நாவை
மெல்லமெல்ல அசைத்தசைத்துத் தமிழைத் தோற்றித்
தண்டலிலா மொழிக்குலத்தின் தாயும் ஆகித்
தழைத்தோங்கும் அருள்ஒளியைத் தலைமேற்கொள்வாம்.

அவை யடக்கம்

தேவாரத் திருமுறையாம் மூவர் பாவும்,
தெளிந்தமணி வாசகனர் தெய்வ வாக்கும்,
தூவார்ந்த மந்திரமும், தொகுப்பு நூலும்,
தொண்டரது புகழென்னும் சுவையின் ஊற்றும்,
பாவார்ந்த பாரதியின் பாட்டும், பண்டைப்
பாரதமும், ஆழ்வாரின் பக்திச் சாறும்,
நாவாரத் தமிழ்ப்புலவர் நவின்று வைத்த
நயங்கொழிக்கும் தனிப்பாட்டும், ஞாலம் போற்றும்,

தமிழ்மறையாம் திருக்குறளும், சிலம்புத் தேனும்,
தனித்தசுவைப் பாற்கடலாம் கம்பன் பாட்டும்
இமிழ்திரைசூழ் கடல்கடந்தும் யாண்டும் கேட்க
எழிற்கவிதைச் "*சிவமணியாய்*" முழங்கி ஆர்த்துத்
தமிழ்வளர்க்கும் "*தமிழ்க்கடலே*"! தலைவ ரேறே!
தமிழரங்கில் வீற்றிருக்கும் தமிழ்ச்சான் ரேரே.!
அமிழ்தெனவே கவிபுனைந்த அன்பு நண்பீர் !
அனைவர்க்கும் மலரமுதன் வணக்கம்! கொள்க! 4

மா நிலத்தார் ஆதிகவி யென்னப் போற்றும்
மறம்விளங்கு பல்புகழ்சேர் இரரம காதை,
கானகத்து வான்மீகன் கருத்தில் தோன்றிக்
கதைமலராய் இயற்கையெழில் கமழப் பொங்கித்
தேனெழுகும் நாற்பாதச் செய்யு ளாகித்
திசையெங்கும் மணம்பரப்பிச் சிறந்த பின்னர்,
ஊனுடலில் வாழ்வாங்கு வாழ்வா ரெல்லாம்
உயர்ந்தோங்கித் தேவரென வாழ்வார் என்ற, 5

வள்ளுவனார் வான்மறைக்குச் சான்று காட்ட
வாய்த்திட்ட நற்கதைபோல், காலப் போக்கில்
மெள்ளமெள்ள அருளாண்மைக் கருணை வீரன்
மெய்ம்மறவர் கைகூப்பும் தெய்வ மாகித்,
தெள்ளுதமிழ்ச் சேரமுனி இளங்கோ நாளில்
திருமாலாய் வளர்ந்தோங்கிச், சிறந்த பக்தி
வெள்ளமெனும் ஆழ்வார்கள் விரிந்த நெஞ்சில்
வியப்புறுபல் அவதார வடிவம் பெற்றான். 6

வள்ளலவன் திருக்கதைதான் வளர்ந்து வந்த
வரலாற்றை நன்குணர்ந்த கம்ப நாடன்,
தெள்ளமுதச் செந்தமிழில் அதனை வார்க்கத்
திருவுளத்தில் கருக்கூட்டித் தினமும் போற்ற,
எள்ளலிலாச் சடையப்பன் எழிற்க ரங்கள்
எடுத்தெடுத்துப் பொருள்கொடுத்தே இறைஞ்சி நிற்க,
உள்ளுணர்ச்சி பிடித்துந்த, ஊழும் கூட்ட
உலகத்தார் தவம்பலிக்க உருவம் தந்தான். 7

எள்ளரிய சங்கத்தி லிருந்தோர் யாத்த
இலக்கியத்து வரலாற்றின் எல்லைக் கோட்டில்,
அள்ளுபுகழ் அகவற்பா ஆற்றுப் போக்கில்
அற்புதமாம் விருத்தமெனும் அணையைக் கட்டிப்
பொள்ளலிலா நற்சிந்தா மணிவி ளைத்துப்
புரட்சிசெய்த திருத்தக்க தேவர் யாப்பை,
மெள்ளமெள்ளச் சந்தமென்னும் கருவி தன்னால்
மின்னாற்றல் கொழிக்கின்ற நிலைய மாக்கி, 8

முன்னோரின் நூன்மரபை மனத்திற் கொண்டு
மூத்தபெருங் காப்பியத்தின் வரம்பை ஆய்ந்து
தன்னேரில் லாத்தலைவன் தகைமை காட்டித்
தண்டமிழின் பண்பாட்டைத் தலையாற் போற்றி
முன்னெழுந்த கதைப்போக்கின் முரண றுத்தே
மொழிமரபின் இலக்கணத்தை முறையாக் காத்து
நன்னகர்கொள் நாட்டுவளம் நயந்து தீட்டி
நாற்பொருள்சேர் கலைக்கோவில் நாட்டி வைத்தான். 9

நூறுதுறை மேதையென நூலோர் போற்றும்
நுவலரிய காப்பியத்துக் கலைஞன் தன்னை
ஆறுதுறை மேதையென அடக்கிக் காட்டல்,
அளவிறந்த பொருள்செறிந்த அறநூல் தன்னைக்
கூறுகிற வள்ளுவனார் குறளென் றோதும்
கொள்கையினை ஒத்திருக்கக், கம்பன் காட்டும்
வீறுகொளும் வண்ணங்கள் பலவாய் நிற்க
விருத்தமெனும் பேரொன்றால் விளக்கல் போலாம். 10

ஞாலமிசை விளங்குகின்ற கலையை எல்லாம்
நம்முன்னோர் அறுபத்து நான்காய்ச் சொன்னார்,
வாலறிவால் ஆய்ந்திட்டால் வரம்பே இன்றி
வான்கலைகள் வளர்ந்திடுதல் உண்மை யன்றோ?
காலமெலாம் நதிபலவாய்க் காட்சி தந்தும்
கடலொன்றில் சென்றடையும் கருத்துப் போலே,
கோலமிகும் பல்கலையைக் கொழிக்கும் கம்பன்
குவலயத்தில் "கவியரசாய்"க் குறிக்கப் பெற்றான். 11

கருத்தென்னும் வயிரத்தைப் பதித்து வைக்கக்
காப்பியத்துப் பெருங்கலைஞன் தேர்ந்து கொண்ட
விருத்தமெனும் பொன்னுருக்கி அவன் வடித்த
விளங்குகலைச் சிற்பத்தின் சீர்த்தி தன்னை,
அருத்தியினால் நானுரைக்கப் புகுந்த தன்மை
அலைகடலைச் சிறுஉழக்கால் அளக்கப் போந்து
வருத்தமுற்றான் சிறுமதியாய் முடிந்த தந்தோ!
வான்மதியைக் கைப்பிடித்துத் தந்தார் உண்டோ? 12

விதித்தொழில்செய் நான்முகன்போல், விருத்த யாப்பை
விளையாட்டுப் பொருளாக்கிக் கையி லேந்திக்
கதித்தெழுந்து கடல்கலக்கிச் சூறை யாடும்
காற்றைப்போல் ஓடவிட்டும், அனிச்சப் பூவை
மிதித்தாலும் இடருழக்கும் மென்சூல் கொண்ட
மெல்லியர்போல் அசைந்தாடித் துவள வைத்தும்,
குதித்தாடும் இளமான்போற் குதிக்க விட்டும்,
குன்றின்வீழ் அருவியெனக் கொழிக்க வைத்தும், 13

கொஞ்சுகின்ற சதங்கையொலி குலுங்கு மாறும்
கொட்டுகின்ற போர்முரசு முழங்கு மாறும்
குஞ்சரத்தின் மணியோசை இரட்டு மாறும்
கோதண்டச் சிலேயிஞெலி தெறிக்கு மாறும்
கிஞ்சுகவாய்க் கிள்ளேமொழி கிளக்கு மாறும்
கீதமிசைக் குயிலோசை கேட்கு மாறும்
பஞ்சியொளிர் சந்தமுறை பலவும் நாட்டிப்,
பசுந்தமிழ்க்கு முடிசூட்டி வைத்தான் கண்டீர்! 14

வழுத்துதமிழ் இலக்கணத்தார் வகுத்த யாப்பில்
வளமார்ந்த கலித்துறைக்கே வரம்பு காட்டி
எழுத்தெண்ணிப் பாடுகின்ற முறையைச் சொல்லி
எம்மொழிக்கும் குறையாத ஏற்றம் கண்டார்;
பழுத்ததமிழ்க் கோவைச்சிற் றிலக்கி யத்தைப்
பாடிவைத்துப் புகழ்பெற்ற புலவோ ரெல்லாம்
எழுத்தெண்ணி நானூறு பாக்கள் யாத்தார்,
இறும்பூது பெற்றுயர்ந்தோம்! இதனேக் கேண்மின்! 15

அழுத்தமுறும் பெருங்கல்விக் கம்ப னுக்கோ
ஆருயி ரத்தின்மேல் விருத்தப் பாக்கள்
எழுத்தெண்ணும் முறையினிலே இயைந்த வென்ருல்
இவன்பெருமைக் களவுண்டோ? எண்ணிப் பார்மின்!
செழித்ததமிழ் நுட்பமெலாம் தேர்ந்த கம்பன்
செந்தேனுய்ச் செய்தமைத்த பாடல் யாவும்
பழுத்துமுதிர் ஈற்றடியில் அவனேக் காட்டும்
பண்பட்ட முத்திரையைத் தாங்கக் காண்பீர்! 16

காற்றுப்பேய் சுழல்வதென வல்லெ ழுத்தால்,
கைக்குழந்தை தவழ்வதென மெல்லெழுத்தால்,
வேற்படைகள் துள்ளிவரும் விசையி னேடே,
மென்மலரின் இதழ்விரியும் காட்சி தோற்றி,
நாற்சீராம் கலிவிருத்தச் சந்தப் போக்கில்
நானூறு நாட்டியத்தின் கதிகள் காட்டி,
ஆற்றலுடைத் தமிழணங்கின் நடையை எல்லாம்
அழகொழுகச் சித்திரித்தான். அமரன் கம்பன். 17

அறுசீரில் கம்பன்செய் அற்பு தத்தை
ஆயிரவாய் அனந்தனுமே சொல்ல எண்ணின்,
கிறுகிறுத்துப் போவானேல், ஒற்றை நாவால்
கிள்ளைமொழி பயிலுகின்ற, என்னை நோக்கிக்
குறுகியகண் பார்வையினுய்! நெடிய வானின்
குறுக்களவைக் கணித்திடுவாய், என்னச் சொன்னர்,
உறுதமிழின் இசைநுட்பம் உணர்ந்தார்க் கன்றி
ஒப்பில்லா இதன்சீர்த்தி உரைக்கப் போமோ? 18

கூவிளமும் இருமாவும் கூடிக் கொண்டால்
குதித்தோடித் *''தண்டலையில் மயில்கள் ஆடும்''*;
மாவளத்த *''கல்லிடையிற் பிறந்து போந்து''*
மகிழ்ந்தோடித் தாதுக்கும் சோலை தோறும்
காவிரியாள் நடைபயின்று செல்வாள்; ஆங்கே
கன்னியிளம் *''குயிலினங்கள் வதுவை செய்யும்.''*
தூவளத்த *''அரியணையை அநுமன் தாங்கத்''*
தொல்முனிவன் வசிட்டனுமே புனைவான் மௌலி. 19

ஈரிரண்டு காய்ச்சீரில் இருமா சேரின்
"என்னனைய முனிவரரும்" வந்து தோன்றித்
தாரிரண்டு தோள்புனைந்த தயர தன்பால்
"தருவனத்துள் யானியற்றும்" வேள்வி சொல்லி
ஏரிரண்டு பாகம்சேர் எம்மான் பாதம்
"எண்ணரிய மறையினெடும்" ஏத்தி நிற்கக்
காரிருண்டு நின்றதெனும் கங்குல் தேயக்
"கண்ணுதல்வா னவன்சடைபோற்" கதிர்கள் தோன்றும்

பண்டெழுந்த இலக்கியத்துப் பெரும்ப ரப்பில்
பல்லாயி ரத்தின்மேல் பாடல் யாத்த
தண்டமிழ்நூற் பேராசான் இவனே யன்றோ?
தமிழ்ப்பாவின் இனம்செய்த தவத்தால் தோன்றிக்
கொண்டலெனத் தமிழ்மழைதான் பொழிந்த தாலே
கொழித்தோங்கித் தமிழ்ப்பயிர்கள் குலுங்கக் கண்டோம்,
வண்டமிழின் வண்ணங்கள் வேறு வேருய்
வாழையடி வாழையென வளர்ந்த தம்மா! 21

காலையிளம் பரிதியெழும் தோற்றம் தன்னைச்
கமலமலர்ச் சித்திரத்தைக், காலே இன்றிக்
கோலிலெழுந் தாடுகின்ற கொடிகள் தம்மைக்
குரைகடலின் பேரலையைக், கொண்டல் வானை,
மாலைதரும் காட்சியினை, மறைந்து தோன்றும்
மாமதியின் விந்தையினை, மனத்தில் எண்ணிக்
காலமெலாம் தற்குறிப்பை ஏற்றி வைத்துக்
காப்பியத்துப் பெருங்கலைஞன் கவிதை யாத்தான். 22

இவன்கவிதை மாளிகையை எட்டிப் பார்த்தேன்,
எதுகைகளும் மோனைகளும் எதிரில் நின்றார்
உவமையுடன் அணிவகைகள் ஓடி வந்தே
ஒய்யாரக் கோலமுடன் ஒருபால் நின்றார்,
நவநவமாம் சந்தங்கள் நாணிக் கோணி
நாயகனின் குறிப்பறியக் காத்து நின்றார்,
தவமுடையான் மார்பகத்தைத் தழுவிக் கொண்டே
தமிழணங்கு வீற்றிருக்கும் காட்சி கண்டேன். 23

சொல்லிருக்கச், சொல்லுக்குப் பொருளி ருக்கச்
சொல்லவந்த கருத்திருக்கத், தொலைவில் நின்றே
நல்லறிஞர் உய்த்துணர்ந்து நயக்கும் வண்ணம்
நாடகத்துக் காட்சியினால் கருத்தை நல்கும்
வல்லமையில் கம்பனுக்கு நிகரே இல்லை,
வார்த்தையொன்றும் இல்லாதே; சீதை கேள்வன்
வில்லொடித்த செய்தியினை, நீல மாலை
வெறியாட்டே நன்குணர்த்த வைத்தான் கண்டீர்! 24

பொற்புரிசை இலங்கைநகர் உள்ளே புக்குப்
பூமகளைக் கைதொழுது போற்றி, மீண்டு
மற்புயத்தால் அரக்கர்களை மாள வைத்து,
மாநகரை வால்நெருப்பால் சுட்டெ ரித்து,
விற்றடந்தோள் இராமனுக்குச் சேதி சொல்ல
விரைகின்ற சொற்செல்வன், வாய்பே சாமே
கற்புடையாள் இருக்கின்ற திசையை நோக்கிக்
கைகுவிக்க வைத்திட்ட கருத்தை ஓர்மின். 25

சீரோங்கு நுண்கலைகள் சிலவற் றுள்ளே
சிறந்தோங்கு சிற்பமுதற் சித்தி ரங்கள்
பேரோங்கி நின்றாலும், கால மென்னும்
பெருஞ்சுழலில் அகப்பட்டுத் தேய்தல் உண்மை;
நேரோங்கி நிற்கின்ற மலையென் றாலும்
நிலைத்தோங்க வழியில்லை; நினைந்து பார்த்தால்
பாரோங்கி வாழுமட்டும் கவிதை ஒன்றே
படைத்தபொழு திருந்ததைப்போல் பாரில் வாழும்.

கல்லில்லை, செம்பில்லை, பொன்னு மில்லை
கனத்ததிரைச் சீலையுமே இல்லை இல்லை,
வெல்லுகின்ற உளியில்லை, விளக்கம் செய்யும்
வெவ்வேறு வண்ணமுடன் கோலு மில்லை;
சொல்லொன்றே அவன்கருவி; சொல்லப் போனால்
தோன்றுகின்ற நிலைக்களமோ கவிஞன் நெஞ்சே;
எல்லையிலா எவ்வுலகும் இவன்கைக் குள்ளே
எழுத்துருவில் அடங்கிடுங்காண்! இவனே தெய்வம்! 27

முன்னோரின் திருப்பணியை முற்று வித்தான்
முடிமன்னர் பாராட்டை முழுதும் பெற்றான்
பின்னோர்க்குச் சேமநிதி திரட்டி வைத்தான்,
பிறநாட்டார் நமைவணங்கும் பேறும் தந்தான்,
தென்னகத்துக் காப்பியநற் கலைஞர்க் கெல்லாம்
திசைகாட்டும் கலங்கரைசேர் விளக்கம் ஆனான்;
மன்னுகவிச் சக்ரவர்த்தி மகுடம் பெற்றான்,
மாகவிஞன் புகழ்பாடி மகிழ்வோம்! நன்றே! 28

1962

பாதாதி கேசம்

திருவயிற்றுப் பேறு

அஞ்சலி

மாதவத்து முதுகுளத்தூர்
மணிவயிற்றிற் பிறந்தருளி
ஆதரித்துத் தமிழ்வளர்க்கும்
அட்டாவ தானியெனச்
சேதுபதி பாராட்டும்
சீர்சரவ ணப்பெருமாள்
பாதமலர் தலைக்கணிந்து
பணிந்தேத்தி அஞ்சலிப்பாம். 1

போற்றி

பாதாதி கேசமெனப்
பாட்டுப் பொருள்காட்டி
மாதாவாய் எனை நினைந்து
மணிவயிற்றுப் பேறுகளைக்
காதாரத் தேன்பாயும்
கவிமாலை வடிவாக்கித்
"தாதா"வென் றெனைப்பணித்த
தாயுளத்தைப் போற்றுகிறேன். 2

தலைவர்: கலைமகள் ஆசிரியர்.
திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் எம். ஏ.

அருள்வேட்டல்

கலைவானில் கற்பனையில்
காளையர்கள் கன்னியராய்
நிலைமாறிப் பாடுகின்ற
நெடுமரபை நானறிந்தும்
அலைமோதும் பெருங்கடல்போல்
அன்பூறும் தாய்நெஞ்சம்
இலையாகித் தவிக்கின்றேன்
என்செய்வேன் தமிழ்த்தாயே! 3

பிள்ளைத் தமிழ்பாடும்
பெருங்கவிஞர் எல்லாரும்
கொள்ளைகொளும் செந்தமிழால்
கொட்டிவைத்த தாயன்பை
உள்ளுகின்றேன் ஆனாலும்
ஊற்றெடுக்கும் தாயுளத்தைத்
தெள்ளுதமிழ்ப் பாவாக்கும்
திறனறியேன் தமிழ்த்தாயே! 4

உன்னருமைத் திருவயிற்றில்
உற்பவித்த பல்கோடி
மன்னுயிரில் யானுமொரு
மகவென்னும் உரிமையினால்
பொன்னொழுகும் மணிவயிற்றின்
புகழ்பாடச் சிறியேனின்
செந்நாவில் வீற்றிருந்து
செழுங்கவிதை தரஅருள்வாய். 5

காரைநகர் அன்னே

காரைநகர்க் காரிகையாள்
கருவுயிர்த்த மூவரையிப்
பேரவையிற் பாடுகின்றேன்
பெருமிதத்தாற் செவிமடுப்பீர்.

வெற்றித் திருமடந்தை வீற்றிருக்கும் தோளாரக்
கற்றவரைக் கைதழுவும் காதலினன்—பொற்புடைய

விண்மீனுய்ச் சென்ருேங்கி மிக்கொளியாய் நின்ருலும்
தண்மீனுய்க் கம்பன் தமிழ்க்கடலின்—கண்மூழ்கி

நின்று புனல்குடைந்து நீந்தி விளையாடிச்
சென்று குதித்தேறிச் செம்மாந்தே-என்றென்றும்

பூந்துணரின் வண்டாய்ப் புகுந்துதமிழ்ச் செந்தேனை
மாந்தி மகிழ்ந்து மயக்கேறிச்-சாந்துணையும்

கம்பனுக்கே நானடிமை என்னக் கழறுகின்ற
நம்பன் கணேசப்பேர் நாயகனும்-செம்பவள

வெற்பிற் படர்ந்தேறும் வெண்ணிலவுக் கற்றையெனப்
பொற்புத் திருவுருவப் பொன்னுடம்பின்-நெற்றிமிசை

மார்பில் வயிற்றில் மணிக்கரத்தில் எங்கெங்கும்
போர்த்தவெண் ணீற்றுப் பொலிவோங்க-ஆர்த்தமணிக்

கண்டிகைசேர் தாழ்வடங்கள் கண்மணியாய் நின்றிலங்கப்
பண்டிருந்த அப்பரடி பாலிக்கும்-தொண்டுளத்தால்

பார்மணக் கும்தெய்வப் பாடலெலாம் தன்நாவால்
சீர்மணக்கச் சொல்லும் சிவமணியாய்-ஏர்மணக்கும்

சங்கத்து நூல்முதலாத் தற்கால நூல்வரைக்கும்
தங்கித் தழைக்கும் தமிழ்க்கடலாய்ப்-பொங்கிவரும்

காரைவளர் கம்பன் கழகத் தலைவரெனப்
பார்போற்றும் ராய. சொ. பாவலனும்-கார்முகில்போல்

வான வழிபடர்ந்து வான்பொருளைக் கொண்டெழுந்து
கான நிலந்திருத்திக் கல்வியெனும்—ஞானப்

பயிர்வளர்க்கும் கல்லூரி பற்பல உண் டாக்கிப்
புயல்வடிவிற் பொன்னைப் பொழிந்தே—உயிரினையும்

கோடி யெனக்கொடுத்த கோமான் இவனென்றே
நீடும் உலகமெலாம் நின்றேத்தத்—தேடரிய

ஆரமுதாய்த் தோன்றி அறிவொளியாய் மேலோங்கிப்
பேருளுக் கோர்வரம்பாய் பேர்நாட்டிப்—பூரணமாய்

வீடும் கொடுத்த விழுத்தெய்வ மாம்என்றே
பாடும் புலவரெலாம் பாராட்ட— வீடடைந்த

வள்ளல் அழகப்ப வானவனும்; தன்வயிற்றுப்
பிள்ளை யெனப்பேசும் பேறுபெற்ற-தெள்ளுதமிழ்க்

காரைநகர் அன்னை கழல்வாழ்த்தி, நற்கவிதை
சீர்நிரம்பச் சொல்வேன் சிறந்து. 7

திருவயிற்றின் சிறப்பு.

ஈன்றெடுத்துப் புறந்தருதல்
என்தலைமைக் கடனென்றே
ஆன்றதமிழ்ப் பெருமாட்டி
அறிவொளிரும் பொன்முடியார்
ஊன்றுதமிழ்ப் பண்பாட்டை
உரைக்கின்ற புறப்பாட்டில்
சான்றெடுத்துத் தாய்வயிற்றின்
தனிப்பெருமை சாற்றினரால்.

கன்னியராய், மணப்பெண்ணாய்க்
 காரிகையாய் வளர்ந்தோங்கிப்
பொன்னிறமும் புதுமெருகும்
 பூரிக்கக் கருத்தாங்கி
மன்னுலகை வாழ்விக்கும்
 மகப்பேற்றுக் குரிமையுடை
அன்னையவள் தெய்வமென்றால்
 அறிவுடையார் யார்மறுப்பார்? 9

வயிற்றின் வடிவம்

யாழ்அடியின் குடம்போல
 இன்னிசைசேர் உருத்தாங்கிச்
சூழ்நிலைக்குத் தகுந்தாங்கு
 சுருங்கிவளர்ந் துயர்ந்தோங்கி
வாழ்வுகக்கும் ஒருயிரை
 வளர்க்கின்ற திருவயிற்றின்
ஊழ்முறையொன் றில்லாக்கால்
 உலகேது? நாமேது? 10

அடிப்பெருமை பேசுதற்கும்
 அகன்றதோள் காட்டுதற்கும்
முடிப்பெருமை பாடுதற்கும்
 முதல்கொடுக்கும் பேறுபெற்ற
துடிப்புடைய உயிர்வளர்க்கும்
 தொல்வயிற்றுப் பேறின்றேல்
படிப்பேது? கவியரங்கப்
 பாட்டேது? பகர்வீரே! 11

நம்பனென ஆழ்வார்கள் நாளும் போற்றும்
 நாயகனும் திருமாலே இராம ஞகி
அம்புவியில் அவதரித்தங் கரக்க ரென்னும்
 ஆணவத்துக் கொடும்பேயை அடித்து வீழ்த்திச் .
செம்பொருளாம் பெருங்கற்புத் திருவைக் கூடிச்
 சீர்பெறவே வாழவழி வகுத்துக் காட்டும்
கம்பனருட் கலைவிளக்கின் கதிரை ஈன்ற
 கவுசலையின் மணிவயிற்றைக் கருத்துள் வைப்பாம்

கைகேயி

மந்தரையின் சூழ்வினையால் மயக்கங் கொண்டு
 மாநிலத்தின் உரிமையெலாம் வரத்தாற் பெற்றுத்
தந்தபொழு தன்னவளைத் தழற்போற் சீறித்
 தாயென்றும் பாராதே தள்ளி நீத்துச்
சுந்தரனைக் கொணர்வதற்குத் தொடர்ந்து சூழ்ந்த
 தூயபெரும் அறக்கடலாம் தோன்றல் வாழ்ந்த
செந்துவர்வாய்க் கைகேயி திருவ யிற்றின்
 சீருணர்ந்து திறனுய்ந்து சிந்தை செய்வாம். 13

சுமித்திரை

திருமகனைப் பின்தொடர்ந்து கானம் சேர்ந்து
 திருத்தொண்டே செய்துவந்த செம்மல் தானும்,
பரதநம்பி யுடன்பிறந்தான் இவனே யென்னப்
 பண்பாட்டால் உயர்ந்தோங்கிப் பழுத்து நின்ற
அருமகனும், கருக்கொள்ளும் அன்பின் ஊற்ருய்
 அறத்திற்கோர் இலக்கணமாய் ஆன்ருேர்போற்ற
இருமகவை ஒருவயிற்றில் ஈன்று தந்த
 இளந்தேவி திருவயிற்றுக் கிணையு முண்டோ? 14

சிறியனவே சிந்தைசெயாத்
செம்மைநிறை திருவுளத்துச்
சீர்த்தி தன்னால்,

நறியபெரும் கடல்கடைந்து
நல்லமுதம் ஈந்தருளி
நலங்கள் செய்தே

மறிதிகழும் திருக்கரத்து
மாதேவன் கழல்மறவா
மனத்தால், ஓங்கும்

நெறிதவரும் பெருந்தவத்து
நீர்மையினால், வானளந்த
நெடிய மாலின் 15

மெய்யுருவைக் கண்ணாரக்
கண்டுருகி மேவுகின்ற
பேறு பெற்ற

பொய்யுரையாப் புண்ணியனைப்
புகழ்கொண்ட குரக்கினத்துப்
புனிதன் தன்னை,

வையமதில் கைதழுவும்
வான்கற்புத் தாரையவள்
மகிழ்ச்சி பொங்கக்

கைம்மலையாம் அங்கதனைக்
கருவுயிர்த்த திருவயிற்றைக்
கருது வோமால். 16

மண்டோதரி

அம்பலத்தில் ஆடுகின்ற
அரன்கழலே வாச்சியமாய்ச்
செம்பவள வாய்மலர்ந்த
திருவாசகம் போற்றும்
அம்பனைய நெடுங்கண்ணாள்
அழகமர்மண் டோதரியின்
செம்பதுமச் சீர்காட்டும்
திருவயிற்றின் புகழ்கேண்மோ. 17

நாற்றிசையும் தன்குடைக்கீழ் நடுங்க வைக்கும்
நாயகனும் இராவணனை நயந்து போற்றி,
ஆற்றலுடை வில்லாளர் ஆனார்க் கெல்லாம்
அரசனென முடிசூடும் ஆண்மை தோற்றிச்
சீற்றமுடன் இந்திரனைச் சிறையில் வைத்த
சிங்கத்தை ஈன்றெடுக்கும் பேறு பெற்ற
மாற்றமிலாப் பெருங்கற்பின் மாட்சி காட்டும்
மயன்மகளின் மணிவயிற்றை மதித்துச் செல்வாம்.

வீடணன் தேவி

அரியுணவை நரியுண்ணும்
ஆசையினாற் சிறையெடுத்துக்
கரியவர்தம் இடைவைக்கக்,
கார்மின்போல் காட்சிதந்த
அரியவளை, ஆதரித்தங்
கன்னையெனக் காத்தருளும்
திரிசடையை ஈன்றெடுத்த
திருவயிற்றைப் பரவுவமே. 19

ஆய்ச்சியரின் வளமனையில்
அளைநாறும் தயிரோடு
காய்ச்சியபால் வெண்ணெயெலாம்
கவர்ந்துண்டும், காணுதே
பேய்ச்சிமுலைப் பாலுண்ட
பெருவயிற்றுப் பிள்ளையெனும்
ஏச்சுரையின் உட்பொருளை
எனக்குரைக்க மாட்டாயோ? 20

பாற்கடலிற் கண்வளரும்
பாம்பணைமேல், திருமகளும்
வீற்றிருந்து பார்த்திருக்க,
வியன்கமல உந்தியிடை
நாற்றிசையும் படைக்கின்ற
நான்முகனை ஈன்றெடுத்தும்
மாற்றமிலா உன்வயிற்றின்
மாயமெனக் குரையாயோ? 21

ஒருவயிற்றிற் பிறவாது
பிறந்தருளி, உலகையெலாம்
திருவயிற்றில் அடக்கியநீ,
தென்னிலங்கை சென்றேறிச்
செருமுகத்தே இராவணனின்
செருக்கொழித்தாய் என்றுசொலும்
மருமமதை விரித்துரைத்தென்
மயக்கொழிக்க வாராயோ? 22

கம்பன் வாழ்த்து

முந்தையரின் கதையெடுத்து
முறைப்படுத்திச் சீராக்கிச்
சிந்தையொளிர் முப்பாலை
சீரணிக்கும் வகையூட்டிச்
சந்தமெனும் உடையுடுத்திச்
சத்தியத்தின் அணிபூட்டிச்
செந்தமிழை வளர்த்தெடுத்த
திருவயிற்றை வாழ்த்துகிறேன்! 23

திருவிருத்தக் கருவறையில்
செந்தமிழின் உயிர்த்துடிப்பை
வரவழைத்துப் புறந்தந்து
வான்குறளின் பாலூட்டி
உருவளர்க்கும் சந்தமெனும்
உணவளித்துப் பெருங்கற்பின்
மருவிரிக்கும் கலைவளர்த்த
மணிவயிற்றை வாழ்த்துகிறேன்! 24

வான்மணக்கும் தமிழணங்கு,
வளர்விருத்த மாளிகையில்
கான்மணக்கக் கருவுயிர்த்த
கவிதையினைக் கலையாக்கி
ஊன்மணக்க உயிர்மணக்க
உள்ளமெலாம் சுவைமணக்கத்
தேன்மணக்க நமக்களித்த
திருவயிற்றை வாழ்த்துகிறேன்! 25

1963

அறத்தின் துணை

ஈன்றவள் பகைஞன்

காப்பு

இயற்றமிழாய் இசைத்தமிழாய்
இன்னிசைசேர் நாடகமாய்
இயற்கையிலே எழுந்தொளிரும்
இனியதமிழ்த் தெய்வதமே!

வள்ளுவரும் 'இளங்கோவும்
வழுத்துமணி வாசகரும்
அள்ளுபுகழ்க் கம்பனுமே
அவதரித்த திருநாட்டில்,

பிறந்துவளர் பேறுபெற்ற
பிள்ளையெனும் உரிமையினல்
சிறந்தகவி அருளவுன்றன்
சேவடியே காப்பாமே! 1

தலைவர்: பேராசிரியர்:
திரு. அ. சீனிவாசராகவன் அவர்கள் எம். ஏ.

அவையடக்கம்

முத்தினைத் தூற்றும் முதுகுடிப் பதிவாழ்
வித்தகர் பயனுற வித்தையைத் தூற்றும்

கலைவளர் கோவிலின் காவல! கம்பனின்
கலைமுதிர் காப்பியக் கடலிடைப் பிறந்த

முத்தினைத் தூற்றும் முதுதமிழ்ப் புலவ!
முத்தமிழ்த் துறையினில் மூழ்கி மூழ்கிக்

கோவா முத்தெனக் குமரித் தமிழ்தரு
சீவா னந்தனின் திருத்தகு நண்ப!

கங்கைக் கரையில் கவினுறத் தோன்றிய
வங்கக் கவிஞனின் வளத்தை எல்லாம்

புனிதக் காவிரிப் பூந்தமிழ் அதனில்
இனிதெடுத் துரைக்கும் இசைசேர் அறிஞ!

எட்டுத் திசைபோல் இலங்கும் கவிஞரின்
அட்டமா சித்தியை அளந்தறி வதற்காய்

மயில்முறை இருக்கையில் மகிழ்ந்தினி தேறும்
இயற்கவி அரங்கின் எழிலார் தலைவ!

அறத்தின் துணைவரை ஆய்ந்துணர்ந் தெடுத்துத்
துறைத்தீந் தமிழால் சொல்லிட எழுந்த

கார்மே கம்போல் கவிதைப் புயல்பொழி
சீர்மே கங்காள்! செந்தமிழ்ப் புலவீர்!

கவியரங் கதனைக் காணவும் கேட்கவும்
செவிமுதல் வழங்கவும் திரண்ட நற்பெரியீர்!

அமிழ்தச் சுவைபொழி அருந்தமிழ்ப் புலமைத்
தமிழ்க்கட லென்னும் தமிழ்ச்சிவ மணியே!

எந்நிலை மாறினும் இப்பெருங் கழகத்
தன்னிலை மாருத் தமிழ்த்தொண் டாற்றும்

கரிய திருமேனிக் கணேசத் தோன்ருல்!
உரிமையால் யார்க்கும் உள்ளன் புடனே

வணக்கம் சொன்னேன். வரையாக் கொடையால்
மணக்கும் பல்கலை மலர்ந்து வளர்ந்திடக்

காரைமா நகர்க்குக் கல்விமா நகரெனும்
பேரைக் கொடுத்த பெரும்புகழ்ச் சான்ருேன்

அறந்தலை நாட்டிய அழகப்ப வள்ளல்
பிறந்தநாள் இன்றெனப் பெரிதுவந் தேத்தி

அன்னுேன் திருவடி அகத்தினிற் சேர்த்துப்
யொன்னுர் தமிழைப் புகழினில் ஏற்றும்

கவிச்சக்ர வர்த்தி கம்பன் விழாவில்
கவியரங் கேறிக் களிக்கும் திருநாள்

இன்று வாய்த்ததென் இணையிலாப் பேறென
நன்று மகிழ்ந்து, நல்லறத் துணையாய்

அழகனைப் போல அமைந்ததோர் செல்வனைப்
பழகுசெந் தமிழால் பாடிய அமுதன்

கவிதையைக் கேட்டுக் கருணைபா லிக்க
அவையோர்ப் போற்றி அதனைத் தொடங்குவல்:

'ஈன்றவள் பகைஞன்'' இஃதென் தலைப்பாம்.
''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை
சேயிற் பிறிதொரு திருப்பே றில்லை

பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே

பாலினைந் தூட்டும் தாயினும் பரிந்து
தேனினைச் சொரியும் தெய்வமென் றுங்குச்

சான்றோர் பலரும் ஈன்றாள் பெருமையைச்
சான்றுடன் காட்டும் சால்புடை நாட்டில்

ஈன்றவள் பகைஞனு? இதென்ன, தலைப்போ?
என்றென் றெண்ணி ஏங்கித் தவித்தே

ஈன்றவள் பகைஞன் என்னுமிச் சொற்றொடர்
கம்பன் வாக்கோ? அல்லது கழகச்

செயலர் தந்தருள் சீதனத் தொடரோ?
என்றாய்ந் திடவே எண்ணினேன். அந்தோ!

அறத்தின் மூர்த்தியாய் அயோத்தியிற் பிறந்து
மறத்தினைத் தொலைத்த மன்னவன் செவியில்

மெய்ப்பொருள் உணர்ந்த மேதகு மறிஞன்
சொல்லின் செல்வத் தோன்றலாம் மாருதி

இராகவன் சொற்ற ஈரேழ் ஆண்டில்
வராதவன் நிற்க, வளரெரி மூழ்கிட

வலம்வரு வள்ளலாம் வாய்மைப் பரதனை
ஈன்றவள் பகையென இயம்பிய தறிந்தேன்.

அலையும் மனத்தினை அடக்கி நிறுத்திக்
கலைஞன் கருத்தினைக் காணவே முயன்று

கவிக்கு நாயகன் கருமுகில் வண்ணனின்
செவிக்குத் தேனெனச் செப்பிடும் இத்தொடர்

பரதனின் பண்பை பறையறைந் துரைக்கும்
வரியென உணர்ந்து வாழ்த்தினேன் கம்பனை.

சரியெனத் தோன்றும் சான்றினைக் கேண்மின்,
"பெருங்காப் பியநிலை பேசுங் காலை

தன்னே ரில்லாத் தலைவனை யுடைத்தாய்"
அறமுதற் பொருளை அணிபெற விரிக்கும்

பாங்குடைத் தென்றே பகர்ந்த தண்டியின்
சூத்திரம் கண்டேயித் தொடர்பொருள் உணர்ந்தேன்.

தன்னுைப் பில்லாத் தனிப்பெருங் காப்பியம்
இராம காதையின் இலக்கியத் தலைவன்
இராம னென்றெடுத் தியம்பவும் வேண்டுமோ?

அங்கன மிருக்க அருட்கவி கம்பன்
தன்னே ரில்லாத் தலைமைக்கு மாருய்
அன்புசால் பரதனை அண்ணலின் மேலாய்ப்

பற்பலர் புகழவே படைத்துப், புதிய
அற்புதம் செய்தமை அனைவரும் அறிவோம்.

எனவே;

காப்பியத் திலக்கணக் கருத்தினை உன்னியோ
கவிமர பதனைக் காக்கவே நினைந்தோ

எண்ணில் கோடி இராமனுய்க் கோசலை
புண்ணியப் பரதனைப் புகழ்ந்திடும் போதினில்

ஓடியே சார்ந்திடும் உத்தமன் மாருதி
தேடியே வளர்த்த செந்தழல் அவித்து

நெடியவன் வரவெனும் நிகழ்ச்சியைச் சொல்லிக்
கொடுமை தவிர்த்தபின், குணப்பெருங் குரிசில்

வானகத் தெதிருறும் வள்ளலை அணுகி
ஊனகத் தூடே உயிருண் டிலையெனத்

தோன்றிய பரதனைத் தொழுது காட்டியே
ஈன்றவள் பகைஞனைக் காண்டி ஈண்டெனுச்

சாற்றவே வைத்தனன் சால்புடைக் கவிஞன்.
அறத்தின் துணைவனுய் அமைந்தநற் பரதனை

ஈன்றவள் பகைஞன் என்றதால், அவர்க்குச்
சிறப்பே அல்லால் சிறுமையொன் றில்லை.

அறத்தின் வழுவினுர் அன்னையே எனினும்
அவரையும் துறத்தல் அறமெனக் காட்டிய

மாண்புறு பரதனின் மாசிலா வாழ்வில்
காண்டகு சிலநிலை கண்டினி மகிழ்வோம்.

கேகயர்கோன் திருமகளாய்க், கிளர்ஞாலம் முழுதாண்டு
சேகறவே திசைபத்தும் தேர்செலுத்தும் தயரதனுர்

ஆகமுறும் காதலியாய், அருந்தெய்வக் கற்பமைந்த
தோகையவள் திருவயிற்றில், சுடர்பூசம் புகமுறவே

ஏகமுறும் மின்ஞற்றல் இரண்டாகி நின்றதுபோல்,
மேகநிற வண்ணனெனும் மெய்ப்பொருளின் மறுபதிப்பாய்,

அறமுதல்வன் அடிமறவா ஆழ்வாரின் முதல்வனென,
வறனறியாப் பெருநீதி வாஞறு புகமண்டும்

நிறைகுணத்துப் பெருங்கடலாய், நீணிலத்தில் பின்பிறந்தார்
முறையுணர்த்தும் இலக்கியமாய், மூவாத செந்தமிழின்

குறளுரைக்கும் அறமெல்லாம் குவிந்தெழுந்த குணக்குன்ருய்
இறைதவருத் தருமத்தின் எழிலுருவாய் உருத்தாங்கி,

ஊனுடம்பு தாஞக உயிரெல்லாம் முன்னவஞத்
தான்வணங்கும் தெய்வமெனத் தனியாக ஒன்றின்றி

வான்புகழ்சேர் வள்ளலையே மனக்கோயில் தனிலிருத்தி
யானென்னும் செருக்ககற்றி எனதென்னும் பற்றறுத்த

ஈனமிலாப் பெருஞானி: இவ்வுலகில் தோற்றமுற
வானவரும் மண்ணவரும் மலர்சொரிந்து வாழ்த்தினரால்!

பண்பொழுகும் குணத்தானைப்
பரதனெனும் பெயரானை
நுண்மையுறும் அறமுணர்ந்த
நுவலரிய தவத்தானை
உண்மையெனும் உருவானை,
உணராத மாந்தர்களின்
திண்மையுறு சிறுமதிசேர்
தீவினையின் கதைகேண்மோ.

கைகேயி—மந்தரை

ஈன்றெடுத்த நற்றாயும்,
எடுத்துவளர் செவிலியெனத்
தோன்றிவந்த மந்தரையும்
தூயகுணப் பரதனையே
ஊன்றியுணர் திறமின்றி
ஊழ்வலியால் பெரும்பழியை
ஈன்றெடுத்து வளர்த்தார்கள்
இருவரத்தின் பெயராலே!

தயரதன்

ஆத்திரத்தால் உணர்வழிந்த அடலேரும் தயரதனும்
கோத்திரத்தின் குலவிளக்காம் கோமைந்தன் பரதனையே
சாத்திரத்தின் படிகருமச் சடங்குசெயும் உரிமைக்குப்
பாத்திரமன் றெனவுரைத்துப் பழிதேடிக் கொண்டனனால்.

கோசலை

தயரதனர் விண்ணேகத் தனயர்களும் கானேகத்
துயரதனற் சோகமுற்ற தூய்மனத்துக் கோசலையார்
உயர்குணத்துப் பரதனையும் உள்ளத்தால் ஐயுற்றே
மயர்வகலத் தெளிந்தபினர் மன்னனெனவாழ்த்தினரே.

வசிட்டமுனி

தவமுதல்வன் வசிட்டனுமே தக்காங்கு நினையாதே
பவமறுக்கும் பரதனையே முடிசூடப் பணித்திடவே
அவமறியாப் பெருநீதி அருட்கடலும், நடுநடுங்கிச்
சவம்போல ஒடுங்கினனல்! சால்பென்ப திதுதானே?

குகன்

படைசூழத் தாயருடன் பரதநம்பி வழிநடந்து
சடையுடனே வருவதனைச் சரியாக உணராதே
விடைபோலும் குகப்பெருமான் வெம்மொழியால் நிந்தித்துக்
கடைநிலையில் உண்மைநிலை கண்டுமனம் களிகூர்ந்தான்.

மயில்முறையின் குலமரபை மாற்றிவைத்த இருவரத்தை
இயல்முறையால் விலக்கிவிட எழுந்தருளும் தருமத்தின்
செயல்முறையை எண்ணிஎண்ணிச் செம்மாக்கும் நெஞ்சத்தால்
அயில்வேலான் புகழ்ந்ததெலாம் அறிவுடையீர்! நீரறிவீர்!

மரமேறிக் கண்பார்க்க, மனத்தினிலே நெருப்பேற
உரமேறும் சீற்றத்தின் உச்சியிலே கொதிப்பேறக்
கரமேறும் வில்லோடு கார்வண்ணன் முன்பேறிச்
சிரமேறும் செருக்கொழிந்து தீப்பரதன் வானேறும்

காட்சியினைக் காணென்று கனன்றெழுந்த இலக்குவனின்
பூட்சியெலாம் போயொழியப் புனிதநெறி நற்பரதன்
மாட்சியெலாம் எடுத்துரைத்து மனவிருளை நீக்கிவிட
மீட்சியுற்ற இளையவனும் மெய்ம்மறந்து நின்றனனால்.

பரதனை உணர்ந்தார் பாராட்டும் பெரும்புகழ்

சிறந்த தம்பியாய் செம்மையின் ஆணியாய்
அறந்தரு துணைவனாய் அருளின் வேந்தனாய்
தவத்திறம் அறிந்துசெய் தருமத் தூதனாய்
பவத்திறம் அறுத்தநற் பரதன் புகழினை;

தன்மகன் கேட்கத் தாய்மனக் கோசலை
முன்மொழிந் தனளால், மும்மடங்கு உன்னிலும்
நற்குணத் தவனென நவின்றனள்; பின்னே

விற்பிடித்த கைநெகிழ வியப்பென்னும் பெருவெள்ளக்
கங்கைக் கரைகண்டும் காகுத்தன் காதலுக்கே
எங்கும் கரைகாணா தேங்கிநின்ற எயினர்கோன்,

தாயினும் அன்புசால் தயாமுதல் இராமர்கள்
ஆயிரம் கூடினும் அறத்துணைப் பரதனின்
ஈறிலாப் பெரும்புகழ்க் கீடா காதெனக்
கூறிய புகழ்ச்சொலும்; குழைந்திடு கோசலை

எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின்அரு ளுக்கரு காவரோ?
புண்ணி யம்மெனும் நின்னுயிர் போயினல்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?

என்ருங்கு பல்வகையாய் எடுத்தோதிப் பரதனையே
பொன்ருத சொல்மலரால் புனைந்ததுவும்,இவற்றிடையே

சிறியன சிந்தைசெய்யாத் செம்மைசேர் வீரவாலி
நிறம்புகும் நெடியஅம்பின் நீள்பெயர் உணர்ந்தகாலை

அறவாழிப் பரதனெனும் அன்பனுக்கு முன்பிறந்தும்
மறவாழிக் கணைதொட்ட மன்னவனே! என்றிகழ்ந்து

வாதிக்கும் போழ்தினிலே வள்ளலுக்கும் உயர்வாக
நீதிக்குத் தலைவணங்கும் நெடும்பரதன் பெருபுகழைக்

காப்பியத்துச் செந்தேன் கவிக்ளிலே நீர்காண
யாப்புறுத்துச் சொல்லி, இனியவனை வாழ்த்துகிறேன்.

வாழ்த்து

அறம்தலை நிறுத்தவந்த அண்ணலார் தம்மாலன்றித்
திறம்தெரிந் துரைக்ககில்லாச் செம்மையின் ஆணிவேராய்,

மூதறிஞர் பலராலும் முழுதுணர வொண்ணாத
பூதலத்தின் அறங்காட்டும் புண்ணியத்தின் திருவுருவாய்,

முன்பிறந்த இராகவனே முழுமுதலென் றுணர்கின்ற
அன்புசால் அருளுள்ளம் அமைந்த அறத்துணையாய்,

அறத்தினுக்குப் புறம்பாக அன்னையவள் நின்றாலும்
மறுத்துரைக்கும் அறவுணர்வால் மாதாவின் பகையாகிப்

பொன்முடியைத் சூடுதற்கே பொன்னான வாய்ப்பிருந்தும்
வன்சடைதன் தலைதாங்க, வள்ளலுக்கே முடிசூட்டும்

நற்பணியில் ஈடுபட்டு நாயகனார் மறுத்துரைத்த
சொற்பணிக்குத் தலைதாழ்த்தித் தூயவன்றன் திருவடியைச்

சென்னிமிசைச் சூடிவந்து செங்கோலாய் அதைஎண்ணித்
தன்னிதயம் தனிலேற்றித் தருமத்தின் காவலனாய்,

அந்தியொடு பகலெல்லாம் அருவிழியும் கண்ணீரால்
முந்தையருட் பாதுகையை முறைமுறையாய் முழுக்காட்டி

மந்திரமாய் ராமனெனும் மணிமொழியை உருவேற்றி
இந்தியங்கள் தமையவித்த இளங்கரும யோகியென

நந்தியென்னும் பதியினிடை நற்றவமே செய்துலகைப்
பந்தமின்றி அரசாண்ட பரதனருட் புகழ்வாழ்க!

* * *

ஈன்றவள் பகைஞனை ஈறிலாப் புகழனை
ஆன்றநல் அறத்தினுக் கருந்துணை ஆயனை
சான்றவர் தலைவனைச் சத்தியத் தூதனை
ஈன்றருள் கம்பனின் இணையடி ஏத்துவாம்.

SOUTH INDIA PRESS.
KARAIKUDI.